தினபூமி
thinaboomi.com
பூமி: 34 சுற்று: 28 கார்த்திகை 25
RNI Regn. No.55306/93 TN/CCN/556/2012-2014
சென்னை, வியாழன், டிசம்பர் 11, 2025
சென்னை மதுரை திருச்சி கோவை நெல்லை சேலம் வேலூர் புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**ஆஸ்திரேலியாவில் 16 வயதிற்கு உள்பட்டோர் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கான தடை அமல்**


....2-ம் பக்கம்

**யுனெஸ்கோ பாரம்பரிய கலாசார பட்டியலில் இடம்பெற்ற தீபாவளி: பிரதமர் நரேந்திரமோடி வரவேற்பு**

...3-ம் பக்கம்

**ஐ.சி.சி. ஒருநாள் புதிய தரவரிசை பட்டியலில் விராட் கோலி 2-வது இடத்திற்கு முன்னேற்றம்**

....6-ம் பக்கம்






முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச்செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் சார்பில் நாமக்கல் மாவட்டம் - சேந்தமங்கலம், நீலகிரி மாவட்டம் - பந்தலூர், திருவண்ணாமலை மாவட்டம் - கீழ்பெண்ணாத்தூர் ஆகிய வட்டங்களில் 7000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 13.97 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்களை திறந்து வைத்தார். மேலும் தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் 332 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்படவுள்ள மேற்கூரை அமைப்புடன் கூடிய 10 நவீன நெல் சேமிப்பு வளாகங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தலைமைச்செயலாளர் முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை தொடக்கம்:

# எஸ்.ஐ.ஆர். பணிகளில் போர்க்கால அடிப்படையில் ஈடுபட வேண்டும்

## தி.மு.க. வாக்குச்சாவடி உறுப்பினர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்

சென்னை, டிச. 11-

**தமிழகம் முழுவதும் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை நேற்று தொடங்கிய நிலையில், எஸ்.ஐ.ஆர். பணிகளில் போர்க்கால அடிப்படையில் ஈடுபட வேண்டும் என்று தி.மு.க. வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.**

**200 தொகுதிகளில்...**

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள அரசியல் கட்சிகள் தீவிரமாக தயாராகி வருகிறது. இந்த தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெற இலக்கு நிர்ணயித்து தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் வியூகம் வகுத்து செயல்பட்டு வருகிறார். இதன்படி ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் தி.மு.க.வினரை உற்சாகத்துடன் ஈடுபடுத்தும் விதமாக "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற முன்னெடுப்பை மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். அதன்படி, தி.மு.க. வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று ஆலோசனை நடத்தினார்.

**மயிலாப்பூர் மேற்கு....**

இது தொடர்பாக தி.மு.க. வெளியிட்ட செய்திக்குறிப்பில், தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று (10.12.2025) மயிலாப்பூர் மேற்கு பகுதி, ஆழ்வார்பேட்டை, 122-வது வட்டம், பாகம் 24-இல் "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" கூட்டத்தில் கலந்து கொண்டு, வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். தமிழ்நாடு தலைகுனியாது - என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பரப்புரையின் முதல் கட்டமாக 68,463 வாக்குச்சாவடிகளிலும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்போது தி.மு.க. வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் 6.8 லட்சம் பேர் பி.எல்.ஓமற்றும் வாக்காளர்களுக்கு உதவிட முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தியிருந்தார்.

**அடுத்த 30 நாட்கள்...**

பரப்புரையின் இரண்டாம் கட்டம் நேற்று முதல் தொடங்கியது. அடுத்த 30

(கடைசி பக்கம் பார்க்க)

### ஆணவம் பிடித்த டெல்லிக்கு

# தமிழ்நாடு என்றைக்குமே அவுட் ஆப் கன்ரோல்தான்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காட்டம்

சென்னை, டிச. 11-

**எந்த ஷா வந்தாலென்ன..? எத்தனை திட்டம் போட்டாலென்ன...? ஆணவம் பிடித்த டெல்லிக்கு தமிழ்நாடு என்றைக்குமே அவுட் ஆப் கன்ரோல்தான் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் காட்டமாக தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் இன்னும் ஒரு சில மாதங்களில் நடைபெற உள்ள நிலையில் தி.மு.க. தீவிரமாக தேர்தல் பணிகளைத் தொடங்கியுள்ளது. அதன் ஒரு பகுதியாக ஒவ்வொரு தொகுதியில் உள்ள ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 'என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி' கூட்டத்தை நேற்று தொடங்கியுள்ளது.

சென்னை மயிலாப்பூர் தொகுதியில் உள்ள தனது வாக்குச்சாவடி கூட்டத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் கலந்துகொண்டார். தனது வாக்குச்சாவடியில் 440 வாக்குகளை இலக்காக நிர்ணயித்து ஒவ்வொரு வாக்குச்சாவடி உறுப்பினர்களுக்கும் அவரவர்களுக்கான இலக்கை முதல்வர் நிர்ணயித்துக் கொடுத்தார். தி.மு.க. வாக்குச்சாவடி உறுப்பினர்கள் வீடுவீடாகச் சென்று பிரசாரம் செய்ய உள்ளனர். இந்த குழுக்களில் மகளிர் கட்டாயம் இடம் பெறுவார்கள் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில், "எந்த ஷா வந்தாலென்ன? எத்தனை திட்டம் போட்டாலென்ன? டெல்லி பாதுஷா என்ற நினைப்போடு தமிழ்நாட்டுக்கு வர நினைத்தால், ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் எங்களது கருப்பு சிவப்புப் படை உங்களுக்குத் தக்க பாடம் புகட்டும். தமிழ்நாடு என்றைக்குமே ஆணவம் பிடித்த டெல்லிக்கு அவுட் ஆப் கன்ரோல்தான் என்று பதிவிட்டுள்ளார்.

### வாக்காளர் பட்டியலில்

# பெயர் விடுபட்டவர்கள் டிச. 16 முதல் விண்ணப்பிக்கலாம்: தேர்தல் கமிஷன்




சென்னை, டிச. 11-

**வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள் வரும் 16-ம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.**

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது நடைபெற்று வரும் கணக்கீட்டு காலம் நாளையுடன் நிறைவடைகிறது. வரைவு வாக்காளர் பட்டியலானது சிறப்புத் தீவிர திருத்தப்பணி கால அட்டவணைப்படி நிர்ணயிக்கப்பட்ட தேதியான வருகிற 16-ந் தேதி அன்று வெளியிடப்படுகிறது. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 27.10.2025 அன்று அறிவிக்கப்பட்ட தருணத்திலிருந்தே, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஒவ்வொரு கட்டத்திலும் பங்கேற்றனர். வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு திரும்ப பெறப்படாத கணக்கீட்டு படிவங்களின் பட்டியல் தொடர்புடைய வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு வழக்கமான அடிப்படையில் பகிரப்பட்டு வருகிறது.

வரைவு வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கு முன் வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்ய வாக்காளர் பதிவு அலுவலர் நிலையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கூட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. திரும்ப பெறப்படாத கணக்கீட்டுப் படிவங்களின் பட்டியல், முகவரியில் குறிப்பிட்ட இல்லாத வாக்காளர்கள், நிரந்தரமாக இடம்பெயர்ந்தவர்கள், இறந்தவர்கள், வாக்காளர் பட்டியலில் இரட்டைப்பதிவு செய்தவர்கள் போன்ற காரணங்களுடன் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பட்டியல் இன்று கணக்கீட்டு காலம் நிறைவடைந்த பின்னர் இறுதி செய்யப்படும். எனவே, அனைத்து வாக்காளர்களும் தங்களது நிரப்பப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை கடைசி தேதி வரை காத்திருக்காமல், விரைந்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஒவ்வொரு குடிமகனின் பங்களிப்பும் முழுமையான மற்றும் பிழையற்ற வாக்காளர் பட்டியல் தயாரிப்பினை உறுதி செய்வதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் சமர்ப்பிக்கும் காலம் வருகிற 16-ம் தேதி முதல் ஜனவரி 15-ம் தேதி வரை ஆகும். இந்தக் காலப்பகுதியில் பெயர் வாக்காளர் சேர்த்தல், நீக்குதல் அல்லது ஏற்கனவே உள்ள பதிவுகள் குறித்து மறுப்பு தெரிவிக்கலாம். எந்த ஒரு தகுதியான குடிமகனும் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படாமல், எந்த ஒரு தகுதியற்ற வரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படாத வகையில் அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர்களும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகிறது. இவ்வாறு தேர்தல் கமிஷன் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### தமிழகத்தில் வரும் தைப்பொங்கலுக்கு

# ஒவ்வொரு குடும்பத்துக்கு ரூ.5 ஆயிரம் வழங்குங்கள்

## பொதுக்குழுவில் எடப்பாடி பழனிசாமி பேச்சு



சென்னை, டிச. 11-

**வரும் தைப்பொங்கலுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கு ரூ.5 ஆயிரம் வழங்குங்கள் என்று தெரிவித்த எடப்பாடி பழனிசாமி, சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி 210 இடங்களில் வெல்லும், தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் என்றும் அவர் உறுதிப்பட தெரிவித்துள்ளார்.**

சென்னையில் நேற்று நடைபெற்ற அ.தி.மு.க. செயற்குழு, பொதுக்குழு கூட்டத்தின் நிறைவாக கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- அன்றைக்கு ஆட்சியில் இருந்தபோதும், இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கும்போதும் நம்மை விமர்சனம் செய்கிறார்கள். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவுக்கு வாரிசுகள் கிடையாது. நாட்டு மக்களைத்தான் வாரிசாக பார்த்தார்கள். அதனால்தான், இன்றைக்கு அ.தி.மு.க.வை யாராலும் தொட்டு பார்க்க முடியவில்லை.

நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. ஆட்சி அமைக்கும். இன்றைக்கு எதிர்க்கட்சிகளும், ஏன் தி.மு.க.வால் கூட அ.தி.மு.க. ஆட்சியை குறை சொல்ல முடியவில்லை. பொற்கால ஆட்சியை கொடுத்தோம். அதே ஆட்சி மீண்டும் அமைய நீங்கள் அத்தனை பேரும் உதவ வேண்டும். இங்குள்ளவர்கள் நினைத்தால் நிச்சயம் அது நிறைவேறும். நிச்சயமாக 100 சதவீதம் வெற்றி பெறுவோம். மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமையும். அதை எந்த கொம்பனாலும் தடுக்க முடியாது. அ.தி.மு.க. கூட்டணி 210 இடங்களில் வெல்லும். தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்.

இப்படிபட்ட இயக்கத்தை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம் செய்வது கேளிக்கூத்தானது. பாராளுமன்ற தேர்தலில் மக்கள் ஒரு மாதிரி வாக்களிப்பார்கள். சட்டசபை தேர்தலில் வேறு மாதிரி வாக்களிப்பார்கள். இன்று பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணி அமைத்துள்ளது. பாராளுமன்ற தேர்தலில் இரு கட்சிகளும் சேர்த்து வாங்கிய வாக்கு 41.33 சதவீதம் ஆகும். 84 சட்டசபை தொகுதிகளில் அதிக வாக்குகள் வாங்கியுள்ளோம். 15 சட்டசபை தொகுதிகளில் 1 சதவீதம் அளவுக்குத்தான் வாக்கு குறைந்தது.

இதையெல்லாம் வைத்து பார்க்கும்போது, அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி 210 இடங்களில் வெல்லும். 2021-ம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையில் 525 அறிவிப்பு வெளியிட்டனர். பல கவர்ச்சிகரமான அறிவிப்புகளை வெளியிட்டனர். ஆனால், பெரும்பாலானவற்றை இன்னும் நிறைவேற்றவில்லை.

அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தலில் தி.மு.க. அரசாங்கம் விதிகளை தளர்த்தி மேலும் 30 லட்சம் பெண்களுக்கு ரூ.1000 வழங்க இருக்கிறது. நீங்கள் எவ்வளவு கொடுத்தாலும் மக்கள் வாங்கிக்கொள்வார்கள். ஆனால், ஓட்டு அ.தி.மு.க.வுக்குத்தான் போடுவார்கள். இப்போது கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் அறிவித்துள்ளனர். கடந்த 4 ஆண்டுகளாக சட்டசபையில் இதை அ.தி.மு.க. வலியுறுத்தியது. மக்களிடம் செல்வாக்கை இழந்ததால், அடுத்த ஆண்டு தேர்தல் வருவதால் இப்போது 10 லட்சம் லேப்டாப் தருவதாக கூறியுள்ளனர். மாணவர்கள் நலனுக்காக கொடுக்கவில்லை. தேர்தலுக்காக கொடுக்கிறார்கள். அதை உரிய நேரத்தில் கொடுக்கவில்லை. தேர்தலில் தோல்வி அடைந்துவிடுவோம் என்று தி.மு.க.வுக்கு பயம் வந்துவிட்டது.

இன்றைக்கு எஸ்.ஐ.ஆரை பார்த்து அலறுகிறார்கள். ஏனென்றால், கள்ள ஓட்டு

(கடைசி பக்கம் பார்க்க)

### பள்ளி வளாகங்களில் ஐ.டி.ஐ. அமைக்க திட்டம்:

# பள்ளிகளை தேர்வு செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவு




சென்னை, டிச. 11-

**பள்ளி வளாகங்களில் ஐ.டி.ஐ. அமைக்க திட்டத்திற்கான பள்ளிகளை தேர்வு செய்ய மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கு பள்ளிக்கல்வி இயக்குனர் உத்தரவிட்டுள்ளார்.**

பள்ளிக்கல்வி இயக்குனர் மற்றும் வேலைவாய்ப்பு, பயிற்சித்துறை இயக்குனருடன் கூட்டம் நடந்தது. அந்த கூட்டத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் தொழில்துறை பயிற்சி மையங்கள் (ஐ.டி.ஐ.) அமைக்க திட்டமிட்டு, அதற்கான செயல்முறை மற்றும் தகுதித் தணிக்கைகள் குறித்து ஆலோசிக்க முடிவு செய்திருக்கின்றனர். அதன்படி, பள்ளி வளாகத்துக்குள் ஐ.டி.ஐ. அமைப்பதற்கு ஏதுவான பள்ளிகளை தேர்வு செய்ய சில விவரங்களை கல்வித் துறை, அதிகாரிகளிடம் கேட்டிருக்கிறது.

இதுதொடர்பாக பள்ளிக் கல்வி இயக்குனர், அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:- ஒவ்வொரு பள்ளியிலும் ஐ.டி.ஐ. அமைக்க குறைந்தபட்சம் நிலத்தேவையாக 50 சென்ட் நிலம் இருக்கவேண்டும். தொழில் பயிற்சி நிலையங்கள் இல்லாத பகுதிகளில் உள்ள பள்ளிகள் தேர்வு செய்யப்பட வேண்டும்.

தொழில் மண்டலங்கள், தொழிற்சாலைகள், தொழில் துறை பகுதிகளுக்கு அருகில் உள்ள பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதன் மூலம் தொழில் தொடர்புகள் மற்றும் மாணவர்களின் வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்படும். இந்த வசதிகள் கொண்டுள்ள அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை தேர்ந்தெடுத்து பள்ளிக் கல்வித்துறைக்கு அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -275.01 | -81.65 |
| பாயிண்ட் 84,391.27 | பாயிண்ட் 25,758.00 |

**தங்கம்** 1 சவரன் ₹96,240 | 1 கிராம் ₹12,030

**வெள்ளி** 1 கிலோ ₹207,000 | 1 கிராம் ₹207.00

**டாலர்** ₹89.88

**பெட்ரோல்** ₹100.75 | **டீசல்** ₹92.34

## ஆஸ்திரேலியாவில் அமலுக்கு வந்தது:
# 16 வயதிற்கு உள்பட்டோர் சமூக ஊடகங்களை பயன்படுத்த தடை

**கென்பரா, டிச. 11-**

16 வயதிற்கு உள்பட்டோர் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கான தடை அமலுக்கு வந்தது.



உலகம் முழுவதும் சமூக ஊடகங்களை அனைத்து தரப்பு மக்களும் சமூக ஊடகங்களை பயன்படுத்தி வருகின்றனர். சமூக ஊடகத்தை குழந்தைகளும் பயன்படுத்துவதால் அவர்களுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. உடல்நலம், மன நலம் உள்பட பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இதனிடையே, ஆஸ்திரேலியாவில் 16 வயதிற்கு உள்பட்ட சிறுவர், சிறுமியர் பேஸ்புக், டுவிட்டர், இன்ஸ்டாகிராம், டிக்டாக் உள்பட அனைத்து வகையான சமூக ஊடகத்தை பயன்படுத்த தடை விதிக்க அந்நாட்டு அரசு அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டது. மேலும், சிறுவர், சிறுமியரின் சமூக வலைதள கணக்குகளை நீக்கவில்லையென்றால் சமூக ஊடக நிறுவனங்களுக்கு ரூ. 300 கோடி வரை அபராதம் விதிக்கவும் மசோதா நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், ஆஸ்திரேலியாவில் 16 வயதிற்கு உள்பட்ட சிறுவர், சிறுமியர் சமூக ஊடகங்களை பயன்படுத்த விதிக்கப்பட்ட தடை நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது. இந்த நடவடிக்கை ஆஸ்திரேலிய சிறுவர், சிறுமியரின் வாழ்வை மாற்றும் சீர்திருத்தமாக இருக்கும் என்று அந்நாட்டு பிரதமர் அல்பெனீஸ் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் ஸ்டார்லிங்க் இணைய சேவை: எலான் மஸ்க் நிறுவனம் விளக்கம்

**வாஷிங்டன், டிச. 11-**

இந்தியாவில் ஸ்டார்லிங்க் இணைய சேவையை எலான் மஸ்க் நிறுவனம் அதிரடி விளக்கம் அளித்துள்ளது.

உலக பணக்காரர்களில் ஒருவரும், அமெரிக்காவை சேர்ந்த பிரபல தொழில் அதிபருமானவர் எலான் மஸ்க். உலகம் முழுவதும் செயற்கைக்கோள் மூலமாக வாடிக்கையாளர்களுக்கு அதிவேக இணைய வசதியை கிடைக்க செய்வதற்கான ஸ்டார்லிங்க் என்ற நிறுவனத்தை தொடங்கினார். இந்தியாவில் ஸ்டார்லிங்க் தொடங்குவதற்கான பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த 3 தினங்களுக்கு முன்பு ஸ்டார்லிங்க் சேவைக்கான கட்டண விவரங்கள் குறித்து அதிகாரபூர்வ வலைதளப் பக்கத்தில் வெளியிடப்பட்டது. மாதாந்திர கட்டணம் ரூ.8 ஆயிரத்து 600 எனவும் ஒருமுறைக்கான நிறுவுதல் கட்டணம் ரூ.34 ஆயிரம் எனவும் வெளியானது.

இந்தநிலையில் ஸ்டார்லிங்க் தளத்தில் வெளியான விவரங்கள், தொழில்நுட்பக் கோளாறால் ஏற்பட்டது எனவும் இணைய சேவைக்கான கட்டண விவரங்கள் இன்னும் நிர்ணயம் செய்யப்படவில்லை என அந்நிறுவனம் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.



தமிழ்நாடு முதலவர் மு.க. ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் நிலஅளவைப் பதிவேடுகள் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 376 நிலஅளவர்கள் மற்றும் 100 வரைவாளர்கள் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

## மாயமான மலேசிய விமானம்:
# பயணிகள் குடும்பத்திற்கு தலா 3.50 கோடி ரூபாய் இழப்பீடு

**கோலாலம்பூர், டிச. 11-**

11 ஆண்டுகளுக்கு முன்பு மாயமான மலேசிய விமானம் பயணிகள் குடும்பத்திற்கு தலா ரூ.3.50 கோடி இழப்பீடு வழங்க சீன கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீனாவுக்கு கடந்த 2014-ம் ஆண்டு எம்.எச்-370 என்ற விமானம் புறப்பட்டது. மலேசிய ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான அந்த விமானத்தில் 12 பணியாளர்கள் உள்பட 239 பேர் பயணித்தனர். நடுவானில் சென்றபோது அந்த விமானம் திடீரென கட்டுப்பாட்டு அறையின் தொடர்பை இழந்தது. எனவே காணாமல் போன விமானத்தை தேடும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டனர்.

எனினும் அதில் இருந்தவர்களின் கதி என்ன என்பது இன்று வரை கேள்விக்குறியாக உள்ளது. இதனால் 11 ஆண்டுகளுக்கு முன்பு மாயமான அந்த விமானத்தை மீண்டும் தேட உள்ளதாக மலேசிய ஏர்லைன்ஸ் நிறுவனம் சமீபத்தில் அறிவித்தது. இதற்கிடையே விமானம் காணாமல் போனது தொடர்பாக பல்வேறு வழக்குகள் பீஜிங் கோர்ட்டில் நடந்து வருகிறது. மாயமான பயணிகள் அனைவருக்கும் தலா ரூ.3.50 கோடி இழப்பீடு வழங்க வேண்டும் என கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

## பாக்.கில் திடீர் துப்பாக்கி சூடு:
# 6 ராணுவ வீரர்கள் பலி

**இஸ்லாமாபாத், டிச. 11-**

பாகிஸ்தானில் ராணுவ வீரர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியது இதில் 6 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையோரம் உள்ள பாகிஸ்தான் மாகாணங்களில் சமீப காலமாக பயங்கரவாத தாக்குதல் அதிகரித்துள்ளது. இதற்கு தெஹ்ரீக்-இ-தலீபான் பாகிஸ்தான் என்ற பயங்கரவாத அமைப்புக்கு ஆப்கானிஸ்தான் ஆதரவு அளிப்பதே முக்கிய காரணம் என பாகிஸ்தான் குற்றம்சாட்டுகிறது. ஆனால் தலீபான்கள் அதனை மறுத்து வருகின்றனர்.

இந்தநிலையில் கைபர் பக்துங்க்வா மாகாண சோதனைச் சாவடியில் ராணுவ வீரர்கள் முகாமிட்டு இருந்தனர். அப்போது அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் திடீரென துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் 6 ராணுவ வீரர்கள் பலியாகினர். 4 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது. இந்த தாக்குதலுக்கு தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

# நிர்மலா சீதாராமனுடன் தி.மு.க. எம்.பி. சந்திப்பு

**சென்னை, டிச. 11-**

நிர்மலா சீதாராமனுடன் தி.மு.க.எம்.பி. அருண் நேரு திடீர் என்று சந்தித்து பேசினார்.

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை தி.மு.க. எம்.பி. அருண் நேரு நேற்று முன்தினம் டெல்லியில் நேரில் சந்தித்து பேசினார். அப்போது மக்கள் பிரச்சினைகள் குறித்த கோரிக்கை மனு ஒன்றை நிர்மலா சீதாராமனிடம் அவர் வழங்கினார்.

இதுகுறித்து தி.மு.க. எம்.பி. அருண் நேரு வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில், புதுடெல்லியில், பொதுமக்களின் வாழ்க்கையை நேரடியாக பாதிக்கும் இரண்டு முக்கியமான விவகாரங்களை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை நேரில் சந்தித்து முன்வைத்தேன்:

கடன் மதிப்பீட்டு நிறுவனங்களில் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான அவசர திருத்தங்கள் இந்தியா முழுவதும் உள்ள கடன் வாங்கும் பொதுமக்களுக்கு நியாயம், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புத்தன்மை உறுதி செய்யப்பட வேண்டும். மோசடியில் தாங்கள் வியர்வை சிந்தி சேமித்த சேமிப்பை இழந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கும், குறிப்பாக துரையூர் பெண்களுக்கும், விரைவான பணத்தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ரயிலில் மூத்த குடிமக்களுக்கு மீண்டும் கட்டண சலுகையா?
### பார்லி.யில் மத்திய அமைச்சர் விளக்கம்

**புதுடெல்லி, டிச. 11-**

ரயிலில் மூத்த குடிமக்களுக்கு மீண்டும் கட்டண சலுகை குறித்து மத்திய அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

பாராளுமன்ற மக்களவையில் நேற்றைய கேள்வி நேரத்தின்போது, காங்கிரஸ் உறுப்பினர் எம்.கே. விஷ்ணு பிரசாத்தின் கேள்வி ஒன்றிற்கு மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதிலளித்து பேசினார். கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு முன்பு இருந்ததுபோன்று, மூத்த குடிமக்களுக்கு ரயில் டிக்கெட்டில் சலுகைகள் வழங்கும் திட்டம் எதுவும் உண்டா? என்பது பற்றிய அவருடைய கேள்விக்கு பதிலளித்த மத்திய அமைச்சர் வைஷ்ணவ், வளர்ச்சியடைந்த நாடுகளில் வசூல் செய்யப்படும் டிக்கெட் கட்டணத்தில் 5 முதல் 10 சதவீதம் அளவுக்கே இந்தியாவில் ரயில்வே கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்றார்.

நம்முடைய அண்டை நாடுகளுடன் ஒப்பிட்டால் கூட மிக மிக குறைவான அளவிலேயே நம் நாட்டில் டிக்கெட் கட்டணம் உள்ளது என்றார். கடந்த ஆண்டு, இந்திய ரயில்வே ரூ.60 ஆயிரம் கோடி மானியம் வழங்கியது. இதனால், குறைந்த கட்டணம் செலுத்தி செல்ல கூடிய அளவில் பயணிகளின் போக்குவரத்து அமைந்திருந்தது என்றார். நம்முடைய குடிமக்கள் அல்லது பயணிகள், குறைந்த அளவிலான கட்டணம் செலுத்தி பயணம் செய்ய கூடிய வசதியை இந்தியா வழங்கி வருகிறது என கூறினார்.

இதனால், ஏற்கனவே குறைந்த கட்டண தொகையே வசூலிக்கப்படுகிறது என்ற ரீதியில் பதிலளித்த அவர், மூத்த குடிமக்களுக்கு கட்டண சலுகை பற்றிய விவரங்களை தெரிவிக்கவில்லை.

## அமெரிக்காவில் சிறிய ரக விமானம் விபத்து

**வாஷிங்டன், டிச. 11-**

அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் பிரேவர்டு நகரில் பகுதியை சேர்ந்த 2 இளைஞர்கள் நேற்று முன்தினம் இரவு சிறிய ரக விமானத்தில் பயணித்துள்ளனர். விமானம் நடுவானில் பறந்துகொண்டிருந்தபோது திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதனால் அதிர்ச்சியடைந்த விமானி பிரேவர்டு நகரின் நெடுஞ்சாலையில் விமானத்தை அவசர அவசரமாக தரையிறக்கினார். அப்போது, விமானம் சாலையில் சென்ற கார் மீது மோதியது.

இந்த சம்பவத்தில் காரை ஓட்டி சென்ற 57 வயது பெண் லேசான காயமடைந்தார். விமானத்தில் பயணித்த யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், காயமடைந்த பெண்ணை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஒரே நாளில் கிலோவுக்கு ரூ.8,000 உயர்வு:
# வெள்ளி விலை புதிய உச்சம்

**சென்னை, டிச. 11-**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை புதன்கிழமை பவுனுக்கு ரூ.264 உயர்ந்து ரூ.96,240-க்கு விற்பனையானது. வெள்ளி ஒரே நாளில் கிலோவுக்கு ரூ.8,000 உயர்ந்து புதிய உச்சத்தில் விற்பனையானது.




தங்கம் விலை இந்த மாதம் தொடக்கம் முதலே ஏற்ற இறக்கமாக இருந்து வருகிறது. சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சனிக்கிழமை பவுனுக்கு ரூ.320 உயர்ந்து ரூ.96,320-க்கு விற்பனையானது. தொடர்ந்து வாரத்தின் முதல் நாளான திங்கள்கிழமை தங்கம் விலையில் மாற்றமின்றி, அதே விலைக்கு விற்பனையான நிலையில், செவ்வாய்க்கிழமை கிராமுக்கு ரூ.40 குறைந்து ரூ.12,000-க்கும், பவுனுக்கு ரூ.320 குறைந்து ரூ.96,000-க்கும் விற்பனையானது.

இந்த நிலையில், புதன்கிழமை கிராமுக்கு ரூ.30 உயர்ந்து ரூ.12,03-க்கும், பவுனுக்கு ரூ.240 உயர்ந்து ரூ.96,240-க்கும் விற்பனையானது. வெள்ளி விலை செவ்வாய்க்கிழமை கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ரூ.199-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.1,000 உயர்ந்து ரூ.1.99 லட்சத்துக்கும் விற்பனையான நிலையில், புதன்கிழமை ஒரே நாளில் அதிரடியாக கிராமுக்கு ரூ.8 உயர்ந்து ரூ.207 உச்சத்தை எட்டியுள்ளது. ஒரு கிலோ ரூ.8,000 உயர்ந்து ரூ.2.07 லட்சத்துக்கும் விற்பனையானது.

## கோவா விடுதியில் தீ விபத்து:
# இணை உரிமையாளர் கைது

**கோவா, டிச. 11-**

கோவா விடுதியில் தீ விபத்து இணை உரிமையாளரை போலீசார் கைது செய்தனர்.

கோவா மாநிலத்தின் வடபகுதியில் அர்போரா கிராமத்தில் 'ரோமியோ லேன்' என்ற இரவு விடுதி உள்ளது. தலைநகர் பனாஜியில் இருந்து 25 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அந்த விடுதியில் கடந்த 3 தினங்களுக்கு முன்பு நள்ளிரவு திடீரென தீவிபத்து ஏற்பட்டது. சிலிண்டர் வெடித்ததால் தீப்பிடித்துக் கொண்டதாக தெரிகிறது. தகவல் அறிந்து தீயணைப்பு படையினரும், போலீசாரும் விரைந்து வந்தனர். அதற்குள் தீவிபத்தில் 25 பேர் பலியானார்கள். அவர்களில் பெரும்பாலானோர் சமையல் கூட ஊழியர்கள் ஆவர். 3 பெண்களும் பலியானார்கள்.

இச்சம்பவம் தொடர்பாக கோவா போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். டெல்லியில் உள்ள அந்த விடுதியின் உரிமையாளர்களான கவுரவ் மற்றும் சவுரப் லுத்ரா இருவரும் வீட்டில் இல்லை.

இதனையடுத்து இருவருக்கும் எதிராக லுக் அவுட் நோட்டீஸ் பிறப்பிக்கும்படி குடியேற்றத்துறை அதிகாரிகளுக்கு போலீசார் தகவல் தெரிவித்தனர். ஆனால் அதற்குள் இருவரும் வெளிநாடு தப்பி விட்டனர். தாய்லாந்தில் இருவரும் இருப்பதாக சொல்லப்படுகிறது.

இந்த நிலையில், கோவா இரவு விடுதியின் இணை உரிமையாளராக இருந்த அஜய் குப்தா என்பவரை போலீசார் இரவில் கைது செய்துள்ளனர்.

ஏற்கனவே இரவு விடுதியின் மேனேஜர் ராஜீவ் மோடக், மேனேஜர் விவேக் சிங், பார் மேனேஜர் ராஜீவ் சிங்கானியா, கேட் மேனேஜர் ரியான்ஷு தாக்குர், ஊழியர் பாரத் கோலி என ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் 6-வது நபராக அஜய் குப்தா கைது செய்யப்பட்டுள்ளார்.

## சென்னையில் அமலாக்கத்துறை சோதனை

**சென்னை, டிச. 11-**

சென்னையில் 5-க்கும் மேற்பட்ட இடங்களில் மலாக்கத்துறை அதிரடி சோதனை நடத்தியது.

சென்னை கோடம்பாக்கம், தி. நகர், பாண்டி பஜார் உள்ளிட்ட 5-க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்தி வருகிறது. கோடம்பாக்கத்தில் உள்ள மேலாண்மை நிறுவனத்தில் துப்பாக்கி ஏந்திய போலீசார் உதவியுடன் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். தொழிலதிபர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பான புகாரில் இந்த சோதனை நடந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

**11-12-2025**

## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** வெளியூர் பயணங்களில் கவனம் தேவை. குழந்தைகளுக்கு மருத்துவ கவனிப்பு தேவைப்படும். கவனமாகப் படித்து கல்வியில் வெற்றிகளைக் குவிக்கும்.

**ரிஷபம்:-** தாயைப் பற்றிய கவலை மனதில் எழும். அவரின் ஆரோக்கியத்தில் தனிக் கவனம் தேவை. எதிலும் தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சி திருவினை யாக்கும். துணிந்து செயல்படு வெற்றி அடைய முயலுங்கள்.

**மிதுனம்:-** புதிய சுபசெய்திகளால் மனதில் உற்சாகம் பிறக்கும். தனவரவு கூடும். மனைவியின் ஒத்துழைப்பு மன மகிழ்ச்சி தரும். நட்பு வட்டம் விரிவடையும். நண்பர்களின் ஒத்துழைப்பு மகிழ்ச்சி தரும்.

**கடகம்:-** எதிர்பார்த்த இனங்களில் இருந்து பணவரவு தாமதப்படும். வியாபாரத்தில் புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுகம் குறைந்து சோக மேகம் சூழும். எதையும் சாதிக்கும் திறமையைப் பெறுவீர்கள்.

**சிம்மம்:-** போதுமான அளவுக்கு தாராளமான தனவரவு இருக்கும். எண்ணிய காரியங்கள் எல்லாம் மாற்றமின்றி, எண்ணியது போலவே நடக்கும். வியாபாரிகள் புத்தி சாதுர்யத்தால் பொருளாதார நிலை மேம்படும்.

**கன்னி:-** தொழில் புரிவோருக்கு வீண் செலவுகள், பண முடையும் தவிர்க்க முடியாததாகும். உண்ணவும், உறங்கவும் நேரமின்றி உழைப்பு அதிகமாகும். சினத்தைக் குறைத்தால் சிக்கல்கள் தீரும்.

**துலாம்:-** தனவரவு தாராளமாக இருக்கும். புதிய திட்டங்களால் வியாபாரம் விருத்தியாகும். பொருளாதார நிலை முன்பைவிட மேம்படும். புத்தி சாதுர்யத்தால் தொழில் நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:-** வேலை தேடுபவர்களுக்கு புதிய அரசு வேலைவாய்ப்பு, அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும் கிடைக்கும். வாழ்க்கையில் இனிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**தனுசு:-** தொழில் சம்பந்தமான பெரியவர்கள் சந்திப்பு பயன் தரும். எண்ணியபடி எண்ணிய காரியங்கள் ஈடேறும். பெண்களால் நன்மை உண்டாகும். ஸ்த்ரீ போக விருத்தி உண்டு.

**மகரம்:-** எதிலும் நியாயத்தோடு நடக்க முயன்றால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். மனைவியின் வாய்துடுக்கு மற்றவர்கள் பகை ஏற்படும். பணிவாக நடந்து அதிகாரிகளிடம் பயன் பல பெறுங்கள்.

**கும்பம்:-** பணவரவால் மனம் பரவசப்படும் ஆடை ஆபரணங்கள், அலங்காரப் பொருட்கள் சேரும். அரசாங்க ஆதரவு மற்றும் உதவிகள் தடையின்றி கிடைக்கும். வியாபாரிகளுக்கு முன்னேற்றமான காலம்.

**மீனம்:-** பலவழிகளிலும் எதிர்பார்த்தபடி தனவரவு வந்து சேரும். நண்பர்கள் உதவி நன்மை பயக்கும். அரசு உதவியால் தொழில் சிறக்கும். விரும்புவது எதுவாயினும் விரைந்து கிடைக்கும்.

## 9-வது நாளாக தொடர்ந்த சிக்கல்:
# 14 இண்டிகோ விமானங்கள் ரத்து

**சென்னை, டிச. 11-**

சென்னை விமான நிலையத்தில் இருந்து புறப்படும் 14 இண்டிகோ விமான சேவைகள் நேற்றும் (டிச. 10) ரத்து செய்யப்பட்டதாக விமான நிலைய நிர்வாகம் அறிவித்தது.

விமான ஊழியர்கள் தட்டுப்பாடு காரணமாக தொடர்ந்து 9-வது நாளாக இண்டிகோ நிறுவனம் சிக்கலை சந்தித்துள்ளது. சென்னையில் இருந்து மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு செல்லும் விமானங்களும், தில்லி, ஹைதராபாத், கொல்கத்தா, கொச்சி, பெங்களூரு உள்ளிட்ட நகரங்களுக்குச் செல்லும் விமானங்கள் என 14 இண்டிகோ சேவைகள் நேற்று ரத்து செய்யப்பட்டன. தொடர்ந்து 9-வது நாளாக இண்டிகோ விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளதால், பயணிகள் கடும் அவதியடைந்துள்ளனர்.

புதிய விமானப் பணி நேரக் கட்டுப்பாட்டு விதிகள் காரணமாக விமானிகள், விமானப் பணிப்பெண்கள் உள்ளிட்டோர் அடங்கிய விமான பணிக் குழுவுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையால், இண்டிகோ நிறுவன விமான சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் நாட்டின் பல்வேறு நகரங்களில், அந்த நிறுவனத்தின் ஏராளமான விமானங்கள் தொடர்ந்து ரத்து செய்யப்பட்டதால், ஏராளமான பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

தொடர்ந்து, புதிய விதிமுறைகளில் இருந்து விமான நிறுவனங்களுக்கு மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் விலக்கு அளித்திருக்கும் நிலையில், நிலைமை படிப்படியாக சீராகி வருகின்றது.

இன்னும் ஓரிரு நாளில் இண்டிகோ விமான நிறுவனத்தின் பிரச்னை முழுமையாக சீராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## முதலில் சில இடங்களில் வெற்றி பெறுங்கள்:
# விஜய் மீது அமைச்சர் கோவி.செழியன் விமர்சனம்

**சென்னை, டிச. 11-**

ஆசைக்கு அளவில்லை என்பதற்கு அடையாளம் நடிகர் விஜய் என தெரிவித்துள்ள உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் முதலில் சில இடங்களில் வெற்றி பெறட்டும், அதன்பிறகு தமிழகத்தில் ஆட்சி அமைக்கட்டும் என்று விமர்சனம் செய்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு அருகே நடுவூரில் ஒரு லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நெல் சேமிப்புக் கிடங்கு அமைக்க ரூ. 70.22 கோடியை அரசு ஒதுக்கீடு செயயப்பட்டு அதற்கான கட்டுமானப் பணிகளை தமிழக முதல்வர் ஸ்டாலின் காணொலிக் காட்சி மூலம் இன்று தொடங்கி வைத்தார்.

இதில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ். பழநி மாணிக்கம், மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினர். பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர் கோவி.செழியன், தமிழக மக்களையே வென்றெடுக்க முடியாத நடிகர் விஜய் பாண்டிச்சேரி மக்களை வென்றெடுப்பேன் என்பது கூரையேறி கோழி பிடிக்காதவர் - வானத்தில் ஏறி வைகுண்டத்தை காட்டுவேன் என்பதுபோல. அவர் தேர்தலில் நிற்கட்டும், முதலில் சில இடங்களில் வெற்றி பெறட்டும், அதன்பிறகு தமிழகத்தில் ஆட்சி அமைக்கட்டும். அதன் பிறகு பாண்டிச்சேரி போகட்டும், ஆசைக்கு அளவில்லை என்பதற்கு அடையாளம் நடிகர் விஜய்" எனத் தெரிவித்தார்.

### கூட்டணி குறித்து முடிவெடுக்க இ.பி.எஸ்.க்கு அதிகாரம்:

# அ.தி.மு.க. பொதுக்குழுவில் 16 தீர்மானங்கள் நிறைவேற்றம்



**சென்னை, டிச. 11-**

தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணையும் கட்சிகள் குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் எடப்பாடி பழனிசாமிக்கே இருப்பதாக அ.தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சென்னை வானகரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழக அரசுக்கு எதிராகவும், தேர்தல் கூட்டணி தொடர்பாகவும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழக முன்னாள் அமைச்சரும் எதிர்க்கட்சி துணைத் தலைவருமான ஆர்.பி. உதயக்குமார், பொதுக்குழுவில் 16 தீர்மானங்களை வாசித்தார்.

**தீர்மானங்கள்:**

1. ஒத்த கருத்துடைய கட்சிகள் கால சூழ்நிலைக்கேற்ப ஒன்றிணைந்து, தி.மு.க.வை வீழ்த்துவதற்காக தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி அமைத்ததற்கு பொதுக்குழு ஒப்புதல்.

2. தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி அமைக்கப்பட்டுள்ள கூட்டணிக்கு, 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' தலைமை தாங்குகிறது. கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் குறித்து முடிவெடுக்கும் முழு அதிகாரத்தை, அ.தி.மு.க. பொதுச் செயலாளர், எடப்பாடி கே. பழனிசாமிக்கு, இப்பொதுக்குழு ஏகமனதாக வழங்குகிறது.

3. கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும். கோவைக்கும், மதுரைக்கும் மெட்ரோ ரயில் திட்ட ஒப்புதலுக்கு முறையாக, சரியாக, போதிய புள்ளி விவரங்களோடு அனுப்பாத தி.மு.க. அரசுக்கு கண்டனம்.

4. ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்குப் பருவமழையின் போது, கனமழை, வெள்ளம், புயல் காற்றும் போன்று மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளில் இருந்து பாதுகாக்க தி.மு.க. அரசு தோல்வி அடைந்து வருகிறது.

5. வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்தை அ.தி.மு.க. வரவேற்கிறது.

6. நெல்லின் ஈரப்பதத்தை 17 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக உயர்த்துவதற்கு, மத்திய அரசின் ஆணையைப் பெற தி.மு.க. அரசை பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

7. அந்நிய முதலீடுகள் குறித்து தவறான புள்ளி விவரங்களை அளிக்கும் முதல்வருக்கு கண்டனம்.

8. தமிழகத்தில் நான்கரை ஆண்டுகளாக சிறுமிகள், இளம்பெண்கள் முதல் வயதான பெண்கள் வரை அனைவருக்கும் பாதுகாப்பு இல்லாத சூழலை உருவாக்கிய முதல்வரின் நிர்வாகத் திறனற்ற போக்குக்கு கண்டனம்.

9. படுபாதாளத்திற்குச் செல்லும் தமிழ் நாட்டின் நிதி நிலைமை. கடன் தொகையில் மூலதனச் செலவு செய்யாமல், தமிழக மக்களைத் தொடர்ந்து கடனாளிகளாக்கும் தமிழக அரசுக்கு கண்டனம்.

10. சட்டம்-ஒழுங்கு சரிந்து கிடக்கிறது. தொடரும் கொலைகள் கொள்ளைகள், பாலியல் வன்கொடுமைகள், போதைப் பொருட்கள் புழக்கம், கூலிப் படையை ஏவிவிட்டு கொலை, கடத்தல், வழிப்பறி, காவல் துறையினர் முதல் வழக்கறிஞர்கள், பெண்கள், குழந்தைகள், மூதாட்டிகள் வரை பாதுகாப்பற்ற நிலையில் தமிழகத்தை வைத்திருப்பதற்கு கண்டனம்.

11. 2021-ல் 525 தேர்தல் வாக்குறுதிகளை தி.மு.க. அளித்தது. அவற்றில் மிகக் குறைவான வாக்குறுதிகளை மட்டுமே அறைகுறையாக நிறைவேற்றிவிட்டு, நீட் தேர்வு ரத்து, கல்விக் கடன் ரத்து, பழைய ஓய்வூதியத் திட்டம், 100 நாள் வேலைத் திட்டத்தை 150 நாட்களாக்குதல், டீசல், பெட்ரோல் விலை குறைப்பு, சமையல் கேஸ் சிலிண்டர் மானியமாக ரூ. 100 வழங்குதல் போன்ற எண்ணற்ற வாக்குறுதிகளை கிடப்பில் போட்டு, எதையும் நிறைவேற்றாமல் இருப்பதற்கு கண்டனம்.

12. ஊழல் சாம்ராஜ்யமாக திகழும் அரசுக்கு கடும் கண்டனம்.

13. பட்டியலினத்தை இழிவு செய்தும், ஒடுக்கப்பட்டவர்களை ஒதுக்கி வைப்பதும், தி.மு.க. ஆட்சியில் நடந்துகொண்டிருப்பதற்கு கடும் கண்டனம்.

14. தென்னக நதிகளின் இணைப்பை நிறைவேற்ற தவறிய தி.மு.க.வுக்கு கண்டனம்.

15. நீதித் துறைக்கே சவால் விடும் ஆட்சியாளர்களின் ஆதிக்க மனப்பான்மையை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

16. எடப்பாடி கே. பழனிசாமியை 2026-ல் மீண்டும் முதல்வராக்க சூளுரை ஏற்போம்.

பின்னர், இந்த தீர்மானங்கள் அனைத்தும் பொதுக்குழு உறுப்பினர்களால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

முன்னதாக கரூர் த.வெ.க. கூட்ட நெரிசலில் பலியான 41 பேருக்கு அ.தி.மு.க. பொதுக்குழுவில் இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# யுனெஸ்கோ பாரம்பரிய கலாசார பட்டியலில் இடம்பெற்ற தீபாவளி

## பிரதமர் மோடி வரவேற்பு

**புதுடெல்லி, டிச. 11-**

யுனெஸ்கோ பாரம்பரிய கலாசார பட்டியலில் தீபாவளி பண்டிகை இடம்பெற்றது. இதற்கு பிரதமர் மோடி வரவேற்பு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அங்கமாக விளங்கும் யுனெஸ்கோவின் தலைமையகம் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உள்ளது. இதில், இந்தியா உட்பட பல நாடுகள் அங்கம் வகிக்கின்றன. உலக மரபு சின்னங்கள் பட்டியலில், பல நாடுகள் தங்களின் முக்கியமான பாரம்பரிய இடங்கள், கலாச்சாரங்களை அவ்வப்போது சேர்த்து வருகின்றன. ஆய்வுக்கு பின், யுனெஸ்கோ பட்டியலில் அவை சேர்க்கப்படுகின்றன.

இந்தநிலையில், யுனெஸ்கோவின் கலாசார பாரம்பரிய பட்டியலில் இந்துக்களின் தீபாவளிப் பண்டிகையும் சேர்க்கப்பட்டுள்ளதாக மத்திய கலாசாரத்துறை மந்திரி கஜேந்திர சிங் ஷெகாவத் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவுக்கு ஒரு வரலாற்று சிறப்புமிக்க நாள், மனித குலத்தின் கலாசார பாரம்பரியப் பட்டியலில் தீபாவளிப் பண்டிகையும் சேர்க்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடியின் பதவி காலத்தில், இந்தியாவின் கலாசார பாரம்பரியங்களுக்கு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்து வருகிறது. இந்த புதிய மைல்கல்லும், அதன் பாதையை வலுப்படுத்துகிறது. தீபாவளியைக் கொண்டாடும் நோக்கமான, நம்பிக்கை, நல்லிணக்கம் மற்றும் சமத்துவம் போன்றவற்றை உலகளவில் எடுத்துச் செல்ல இந்தக் கவுரவம் உதவுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவிலும் உலகெங்கிலும் உள்ள மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். எங்களைப் பொறுத்தவரை, தீபாவளி நமது கலாசாரம் மற்றும் வாழ்வியலுடன் மிகவும் நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது. இது நமது நாகரிகத்தின் ஆன்மா. இது வெளிச்சத்தையும், நீதியையும் வெளிப்படுத்துகிறது. யுனெஸ்கோவின் பாரம்பரியப் பட்டியலில் தீபாவளி சேர்க்கப்படுவது இத்திருவிழாவின் உலகளாவிய பிரபலத்துக்கு மேலும் பங்களிக்கும். ஸ்ரீ ராமரின் கொள்கைகள் நம்மை என்றென்றும் வழிநடத்தட்டும். என அதில் பதிவிட்டுள்ளார்.

## புதுச்சேரியில் பொங்கல் பரிசு தொகுப்பு அறிவிப்பு

**புதுச்சேரி, டிச. 11-**

புதுச்சேரியில் ரூ.750 மதிப்புள்ள பொங்கல் பரிசு தொகுப்பு ஜனவரி 3-ந்தேதி முதல் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி நடைபெறுகிறது. முதல்-அமைச்சராக ரங்கசாமி இருந்து வருகிறார். தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளதைபோல், புதுச்சேரியிலும் தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த நிலையில், புதுச்சேரி அரசு ரூ.750 மதிப்புள்ள பொங்கல் பரிசு தொகுப்பு ஜனவரி 3-ந்தேதி முதல் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது. பச்சரிசி, நாட்டு சர்க்கரை, பாசிப்பருப்பு, நெய், சூரியகாந்தி எண்ணெய் ஆகியவை பொங்கல் பரிசு தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச்செயலகத்தில், இந்திய கடற்படை வைஸ் அட்மிரல் சஞ்சய் பல்லா சந்தித்து, பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச்செயலாளர் முருகானந்தம், பொதுத்துறைச் செயலாளர் ரீட்டா ஹரிஷ் தக்கர், இந்திய கடற்படை ரியர் அட்மிரல் சதிஷ் செனாய், கேப்டன் இஷான் பாண்டே, லெப்டினன்ட் ஆகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஓய்வு பெற்ற 42 பத்திரிகையாளர்களுக்கு ரூ.12,000 மாத ஓய்வூதியத்திற்கான ஆணை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை. டிச. 11-**

ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு ரூ.12 ஆயிரம் ஓய்வூதியத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (10.12.2025) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்கு தலா 12 ஆயிரம் ரூபாய் மாதாந்திர ஓய்வூதியத்திற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு ஆணைகளை வழங்கினார்.

பத்திரிகையாளர்கள் அன்றாட உலகச் செய்திகளை மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் உடனுக்குடன் வெளியிடுவதோடு, அரசிற்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கி அரசு செயல்படுத்தும் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்வதோடு, பேரிடர் காலங்களிலும் புயல், மழை, பெருவெள்ளத்தால் பொது மக்கள் பாதிக்கப்படும்போதும், பெரும் விபத்துகள், தொற்று நோய்ப் பரவல்கள் முதலிய சோதனைக் காலங்களிலும் இரவு பகல் எனப் பாராது ஓய்வின்றிப் பணி செய்து, உண்மைச் செய்திகளைத் திரட்டி மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள். பத்திரிகையாளர்களின் இத்தகைய பணியினை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாட்டில் முதன்முறையாக உழைக்கும் பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றப்பின், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் பத்திரிகையாளர் நலவாரியம் 1.12.2021 அன்று உருவாக்கப்பட்டு, உழைக்கும் பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கான நலத்திட்ட உதவிகள் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, கருச்சிதைவு உதவித் தொகை, கண் கண்ணாடி செலவுத் தொகை, இயற்கை மரணத்திற்கு உதவித் தொகை மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகிய உதவித் தொகைகள் 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் வழங்கப்பட்டு வருகின்றன. பத்திரிகையாளர் நலவாரியத்தில் தற்போது வரை 3674 நபர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, 81 பத்திரிகையாளர்களுக்கு ரூ.8,56,500/- உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம், ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு நல நிதி, பத்திரிகையாளர் பணிக்காலத்தில் இயற்கை எய்த நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு உதவித்தொகை, குடும்ப ஓய்வூதியம், பத்திரிகையாளர் நல வாரியம் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றப்பின், 18.7.2022 ஆம் நாளிட்ட அரசாணையின்படி, பணியிலிருந்து ஓய்வுபெற்றவுடன் வழங்கப்படும் பணிக்கொடை உச்சவரம்பு ரூ.3 லட்சம் என்பதை ரூ.4 லட்சமாக உயர்த்தி வழங்கி வருகிறது.

பத்திரிகையாளர் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.10,000/-லிருந்து ரூ.12,000/-ஆக 14.06.2023 முதல் உயர்த்தப்பட்டு, 356 பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.5,000/-லிருந்து ரூ.6,000/- ஆக ஜூன் 2023 முதல் உயர்த்தப்பட்டு 72 பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது. இதில், தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை 125 பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமும், 27 பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும், இவ்வரசு பொறுப்பேற்றப்பின்னர் 59 பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு 2 கோடியே 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், புகைப்படக்காரர், செய்தியாளர், பிழை திருத்துநர் ஆகியோர் பணிக்காலத்தில் இயற்கை எய்த நேரிட்டால் அவர்கள் குடும்பத்தினருக்கு முதல்-அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி ரூ.1.25 லட்சம் என்பதை ரூ.2.50 லட்சமாகவும், ரூ.2.50 லட்சம் என்பதை ரூ.5 லட்சமாகவும், ரூ.3.75 லட்சம் என்பதை ரூ.7.50 லட்சமாகவும், ரூ.5 லட்சம் என்பதை ரூ.10 லட்சமாகவும் இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கப்படுகிறது.

பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்குத் திராவிட மாடல் அரசு, பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதந்திர ஓய்வூதியமாக தலா ரூ.12 ஆயிரம் வழங்கிட 27.11.2025 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி, பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்கும் தலா 12 ஆயிரம் ரூபாய் மாதாந்திர ஓய்வூதியத்திற்கான ஆணைகளை தமிழ்நாடு முதல்வர் நேற்று வழங்கினார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடியுரிமை பெறுவதற்கு முன்பே சோனியா காந்தி வாக்களித்தார்

## மக்களவையில் அமித்ஷா குற்றச்சாட்டு

**புதுடெல்லி, டிச. 11-**

வாக்குத் திருட்டு மூலமே நேருவும், இந்திராவும் நாட்டின் பிரதமரானார்கள் என்றும், குடியுரிமை பெறுவதற்கு முன்பே, சோனியா காந்தி வாக்களித்ததாகவும் பாராளுமன்ற மக்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறினார்.

பாராளுமன்றத்தில் நடைபெறும் சிறப்பு தீவிர திருத்தம் மீதான விவாதத்தின் போது மக்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசினார். அப்போது, வாக்குத் திருட்டு குறித்து ராகுல் கூறிய குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையில் பேசிய அவர், காங்கிரஸ் தலைவர்களான நேருவும், இந்திராவும் வாக்குத் திருட்டு மூலமே வெற்றி பெற்று பிரதமரானார்கள். சோனியா காந்தி, இந்திய குடியுரிமை பெறும் முன்பே தேர்தலில் வாக்களித்ததாக வழக்கு உள்ளதாக மக்களவையில் கூறினார்.

மேலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், ராஜீவ் காந்தி காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால், இவர்கள் ராஜீவ் காந்தியையும் ஏற்கவில்லை. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு எதிரான மனுக்களை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. அந்த தீர்ப்பையும் இவர்கள் ஏற்கவில்லை என்று அமித்ஷா பேசினார்.

அமித்ஷாவின் பேச்சுக்கு காங்கிரஸ் மற்றும் தி.மு.க. உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அமித்ஷா கூறும் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் எம்.பி.க்கள் கோஷம் எழுப்பினர். தொடர்ந்து பேசிய அமித்ஷா, இனி, வாக்குப் பெட்டிகளை எடுத்துச் சென்று ஊழல் நடைமுறைகளால் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதால் எதிர்க்கட்சிகள் கவலைப்படுகின்றன. பிரதமர் மோடியின் சுற்றுப்பயணத் திட்டத்துக்கும் தேர்தல் தேதிகள் அறிவிப்புக்கும் இதுவரை எந்த தொடர்பும் இருந்ததே இல்லை; பிரதமர் எப்போதும் மக்களுடனேயேதான் இருக்கிறார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு முதல்முறையாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன, பின்னர் 2009 ஆம் ஆண்டு, காங்கிரஸ் இரண்டு தேர்தல்களிலும் வெற்றி பெற்றது, ஆனால் 2014 தோல்விக்குப் பிறகுதான் அவர்கள் புகார் செய்யத் தொடங்கினர் என்றும் அமித்ஷா பேசினார்.

தேர்தல் தோல்வியின் வரலாறு 2014 ஆம் ஆண்டில் இருந்து தொடங்கியது, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்1989-ல் ராஜீவ் காந்தியால் கொண்டு வரப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை அவர்களே குற்றம் சாட்டினர். ஆனால், தேர்தல் தோல்விகளுக்குக் காரணம் உங்கள் தலைமைதானே தவிர, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரமோ, வாக்காளர் பட்டியல்களோ அல்ல என உள்துறை அமைச்சர் கூறினார்.

**மரம் மனிதனின் உரம்**

# தமிழகம் வருகிறார் ராகுல் காந்தி

**சென்னை, டிச. 11-**

காங்கிரஸ் கட்சியின் கிராம கமிட்டி மாநில மாநாட்டில் ராகுல் காந்தி பங்கேற்க அடுத்த மாதம் தமிழகம் வரவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் உள்ள 234 சட்டசபை தொகுதிகளுக்கும் அடுத்த ஆண்டு (2026) ஏப்ரல் மாதம் தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்தத் தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவும் என்று தெரிகிறது. அதாவது, திமுக தலைமையில் ஒரு அணியும், அதிமுக தலைமையில் மற்றொரு அணியும், நடிகர் விஜய் கட்சியான தமிழக வெற்றிக் கழகம் தலைமையில் இன்னொரு அணியும், சீமானின் நாம் தமிழர் கட்சி தனித்தும் களம் காண இருக்கின்றன.

சட்டசபை தேர்தலையொட்டி மக்களை சந்திப்பதற்காக அரசியல் கட்சி தலைவர்கள் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி, நடைபயணம் போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தநிலையில் 2026 சட்டசபை தேர்தலுக்காக அடுத்த மாதம் தமிழ்நாட்டுக்கு வருகை தர உள்ளார். ராகுல்காந்தி பங்கேற்கும் கிராம கமிட்டி மாநில மாநாட்டையும் பிரியங்கா காந்தியின் பேரணியையும் ஒருங்கிணைக்க குழு அமைக்கப்பட்டுள்ளதாக தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தமிழ்நாடு முழுவதும் பங்கேற்கும் கிராம கமிட்டி மாநில மாநாட்டை ஒருங்கிணைப்பதற்காக கீழ்கண்ட குழுக்களுக்கு தலைவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். நிதிக்குழு கே.வீ. தங்கபாலு, வாகன வசதி ஏற்பாட்டுக் குழு சு. திருநாவுக்கரசர், வரவேற்புக்குழு எம். கிருஷ்ணசாமி, விளம்பரக்குழு கே.எஸ். அழகிரி, பிரச்சாரம் மற்றும் அணி திரட்டல் குழு சா. பீட்டர் அல்போன்ஸ், மாநாட்டு திடல் அமைப்பு, தங்குமிடம் ரூபி ஆர். மனோகரன், எம்.எல்.ஏ., மற்றும் உபசரிப்புக்குழு, மேலும், அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி அவர்கள் கலந்துகொள்ளும் மகளிர் பேரணி சிறப்பாக நடத்திட கீழ்கண்ட ஒருங்கிணைப்புக் குழு அறிவிக்கப்படுகிறது.

ஜோதிமணி, எம்.பி., சுதா ராமகிருஷ்ணன், எம்.பி., ராணி, முன்னாள் எம்.பி., ஹசீனா சையத், தலைவர், மகிளா காங்கிரஸ் - உறுப்பினர், தாரகை கத்பர்ட், எம்.எல்.ஏ. - உறுப்பினர், ராணி வெங்கடேசன், முன்னாள் எம்.எல்.ஏ, இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திலீப் வழக்கில் அரசு சார்பில் மேல்முறையீடு: கேரள முதல்வர் பினராயி விஜயன் விளக்கம்

**திருவனந்தபுரம், டிச. 11-**

திலீப் மீது வழக்குப்பதிவு குறித்து கேரள முதல்வர் பினராயி விஜயன் விளக்கமளித்துள்ளார்.

கேரளாவில் பிரபல நடிகை பலாத்காரம் செய்யப்பட்ட வழக்கில் இருந்து நடிகர் திலீப் உள்பட 4 பேர் விடுவிக்கப்பட்டனர். 6 பேர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட திலீப் கருத்து தெரிவிக்கையில், 'என்னை இந்த வழக்கில் சிக்க வைக்க, எனக்கு எதிராக கூட்டு சதி நடந்தது' என்றார்.

இதுதொடர்பாக திருவனந்தபுரத்தில் முதல்வர் பினராயி விஜயன் நிருபர்களிடம் கூறியதாவது:- நடிகை பலாத்கார வழக்கில் நடிகர் திலீப்பிற்கு எதிரான சாட்சியங்களின் அடிப்படையில்தான் அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. தன்னுடைய செயல்பாட்டை நியாயப்படுத்த திலீப் இவ்வாறு கூறி வருகிறார். அரசு எப்போதும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஆதரவாகவே செயல்படும். தீர்ப்புக்கு எதிராக ஐகோர்ட்டில் மேல் முறையீடு செய்யப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## விஜய் தலைமையில்

# இன்று த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம்

**சென்னை, டிச. 11-**



த.வெ.க. தலைவர் விஜய் தலைமையில் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் மற்றும் ஆலோசனை நடைபெறுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 2026-ம் ஆண்டு சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள விஜய் தலைமையிலான த.வெ.க. தீவிரமாக தயாராகி வருகிறது.

கரூர் சம்பவத்தை அடுத்து 72 நாட்களுக்குப் பின் பொதுவெளியில் புதுச்சேரி உப்பளம் ஹெலிபேடு மைதானத்தில் த.வெ.க. பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

அதில் பேசிய விஜய், "மத்திய அரசுக்குதான் தமிழ்நாடு ஒரு தனி மாநிலம், புதுச்சேரி ஒரு தனி யூனியன் பிரதேசம். நமக்கு அப்படி இல்லை. தமிழ்நாடும், புதுச்சேரியும் தனித்தனியாக இருந்தாலும் நாமெல்லாம் ஒன்றுதான், நாமெல்லாம் சொந்தம்தான். தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, கர்நாடகா, ஆந்திரா மட்டுமல்லாமல் உலகின் எந்த மூலையில் நம்ம வகையறாக்கள் இருந்தால் அவர்கள் அனைவரும் நம் உயிர்தான்,

இந்த விஜய், தமிழ்நாட்டுக்கு மட்டும் தான் குரல் கொடுப்பான் என நினைக்காதீர்கள். அப்படி நினைத்தால் அது தவறானது. புதுச்சேரி மண்ணுக்கும் சேர்த்துதான் குரல் கொடுப்பான். அது என் கடமையும் கூட" என்று பேசி இருந்தார். மேலும் தி.மு.க.வை கடுமையாக விமர்சனம் செய்தும் பேசினார்.

இதனிடையே ஈரோட்டில் த.வெ.க. சார்பில் விஜய் பிரசார கூட்டம் வருகிற 16-ந் தேதி நடைபெற இருந்தது. இந்த நிலையில் பிரசார கூட்டம் 18-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் ஈரோடு அருகே விஜயமங்கலம் சரளை பகுதியில் நடைபெற உள்ளது. இதற்காக 19 ஏக்கர் பரப்பளவில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் பனையூரில் த.வெ.க. தலைவர் விஜய் தலைமையில் இன்று (11-12-2025) மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெறுகிறது. இதன்படி மாவட்ட செயலாளர்கள், மாநில நிர்வாகிகளுடன் இன்று விஜய் அவசர ஆலோசனையில் ஈடுபட உள்ளார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் தேர்தல் பணிகள், சிறப்பு தீவிர திருத்தம், அடுத்த கட்ட மக்கள் சந்திப்பு பயண ஏற்பாடுகள் குறித்து முக்கிய முடிவு எடுக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



வரும் தேர்தலில் கடுமையான போட்டி உள்ளதால் யாருக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்காமல் போகலாம். இதனால் கூட்டாட்சி அமைக்கும் வாய்ப்பு உள்ளது தற்போது சில கட்சிகளுடன் கூட்டணி குறித்துப் பேசி வருகிறோம். அதை தற்போது வெளிப்படையாகத் தெரிவிக்க இயலாது.

- டி.டி.வி.தினகரன்



அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டவர்கள் டெல்லி சென்று அமித்ஷாவை சந்தித்துவிட்டு வருகிறார்கள். அதற்காக அமித்ஷாவை கண்டித்து ஒருவார்த்தை கூட பேசாத பழனிசாமிக்குதான் கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் குறித்து முடிவெடுக்கும் முழு அதிகாரம் என்பது மிக சிறந்த நகைச்சுவை.

- ஆர்.எஸ்.பாரதி



திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள ஒரு சர்வே தூணை தீபம் ஏற்றும் தூணாக உண்மைக்கு மாறாக, அரசியல் நோக்கோடு திரித்து வழக்கு தொடுத்துள்ள இந்துத்துவா அமைப்பினருக்கு சாதகமாக நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தீர்ப்பு வழங்கி உள்ளார். மதவாத அமைப்பினருக்கு சாதகமாக செயல்படும் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

- வீரபாண்டியன்



நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் திருப்பரங்குன்றம் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி மதவெறி அரசியலைத் தூபமிட்டு வளர்க்கப் பார்க்கிறார். அவருக்கு எதிராக 'இம்பீச்மெண்ட் நோட்டீஸ்' அளிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் தன்மீதான விசாரணை தடையின்றி நடப்பதற்கு ஏதுவாக, தானே முன்வந்து பதவி விலக வேண்டும்.

- திருமாவளவன்



சென்னை ஓட்டேரி ஸ்ட்ராஹன்ஸ் சாலை சந்திப்பில் உள்ள உணவகத்தின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் காயம் ஏற்பட்டு கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களுக்கு நிவாரண தொகையை மேயர் ஆர்.பிரியா வழங்கினார். உடன் வட்டாட்சியர் குப்பம்மாள் உள்ளார்.

# சென்னை கொளத்தூர் ராஜாஜி நகரில் 100 மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் ரூ.8.88 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மூத்த குடிமக்கள் உறைவிடம் வரும் ஜனவரி மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

**சென்னை,டிச.11**

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்பி.கே.சேகர் பாபு (10.12.2025) சென்னை, கொளத்தூர், பூம்புகார் நகரில் கட்டப்பட்டு வரும் அருள் மிகு கபாலீசுவரர் கலை மற் றும் அறிவியல் கல்லூரி கட் டட கட்டுமானப் பணிகளை யும், இராஜாஜி நகரில் நடை பெற்று வரும் மூத்த குடிமக் கள் உறைவிட கட்டுமான பணிகளையும் நேரில் பார் வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்க அறிவுரைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, வடபழனி அருள்மிகு வடப ழனி ஆண்டவர் திருக்கோயி லின் உபக் கோயிலான அருள் மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயிலில் ரூபாய் 20.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற் கொள்ளப்பட உள்ள திருப்ப ணிகளை தொடங்கி வைத்த அவர், வடபழனி திருக்கோயி லின் மற்றொரு உபக் கோயி லான அருள்மிகு ஆதிமூலப் பெருமாள் திருக்கோயில் ரூ.3.37 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கருங்கல் கட்டுமான பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் இந்து சமய அறநி லையத்துறை அமைச்சர் செய் தியாளர்களிடம் தெரிவித்ததா வது மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் கொளத்தூரில் தற்கா லிக கட்டிடத்தில் நடத்தப்ப ட்டு வரும் கலை மற்றும் அறி வியல் கல்லூரியில் சுமார் ஆயிரம் மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இக்கல்லூரிக்கு நிரந்தரம் கட் டிடம் கட்டுவதற்கு பூம்புகார் நகரில் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. வரும் ஜனவரி மாதத்தில் புதிய கல்லூரி கட்டடம் மாணவர்களின் பயன்பாட்டி ற்கு ஒப்படைக்கப்படும். அதேபோல், கொளத்தூர் ராஜாஜி நகரில் எவ்வித கட்ட ணமும் இன்றி 100 மூத்த குடி மக்கள் பயன்பெறும் வகை யில் ரூ.8.88 கோடி மதிப்பீட் டில் கட்டப்பட்டு வரும் மூத்த குடிமக்கள் உறைவிட மும் வரும் ஜனவரி மாதத்திற் குள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

சன்மார்க்க நெறியை போதித்தவரும், ஒழுக்கத்தின் அடையாளமாக திகழ்கின்ற, அவருடைய உள்ளத்திற்கு ஏற் றார் போல் வெள்ளுடையில் காட்சி தருகின்ற அருட்பெரு ஞ்ஜோதி வள்ளலாருக்கு சிற ப்பு சேர்க்கும் வகையில் வரு கின்ற 2026 பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் கீழ்பாக்கம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திரு க்கோயிலுக்கு சொந்தமான மைதானத்தில் 10,000 சன்மார் க்க அன்பர்கள் பங்கேற்கும் வகையில் அனைத்துலக வள் ளலார் மாநாட்டினை மாண்பு மிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்கள். இம்மாநாட்டில் கண்காட்சி அரங்குகள், கருத் தரங்கம், ஆய்வரங்கம்,



மூலிகை கண்காட்சி, நாள் முழுவதும் அன்னதானம் உள் ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளன. நிறை வாக, இம்மாநாட்டில் மாண் புமிகு தமிழ்நாடு முதலமைச் சர் அவர்கள் வள்ளலார் குறி த்த பல்வேறு புதிய அறிவிப் புகளையும் வெளியிடுவார். நேற்றைய தினம் அதற்கான ஆரம்ப கட்ட பணிகளை தொடங்கியுள்ளோம்.

தமிழ்நாட்டில் கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம் உள்ளிட்ட துறைகள் சரியி ல்லை அதற்கு காரணம் திமுக ஆட்சி தான் என த.வெ.க கட் சித் தலைவர் நடிகர் விஜய் தெரிவித்துள்ளாரே என செய் தியாளர்கள் கேட்டதற்கு, அதை சொல்பவர் சரியில்லை என்று நான் கூறுகிறேன்.

தைலாபுரத்தை முழுவது மாக திமுக டேக் ஓவர் செய்து விட்டதாக அன்புமணி தெரி வித்துள்ளாரே என செய்தியா ளர்கள் கேட்டதற்கு, தன்னை இந்த உலகத்திற்கு உயிர் கொடுத்து அறிமுகப்படுத்திய வரையே திருப்திகரமாக வைத்துக் கொள்ள முடியாத வர்களுக்கெல்லாம் பதில் சொல்வதற்கு அவர்கள் தகுதி உடையவர்கள் அல்ல என்பது எனது கருத்தாகும். அவரு டைய தந்தையாரே அவருக்கு கைக்கூலி என்ற பட்டத்தை வழங்கி உள்ளார். ஆகவே வேறு யாருக்கும் அந்த பட்ட த்தை வழங்க கூடிய தகுதி அன்புமணிக்கு இல்லை என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீ தர், கூடுதல் ஆணையர் திரு மதி சி. ஹரிப்ரியா, வடபழனி ஆண்டவர் திருக்கோயில் தக் கார் ல. ஆதிமூலம், மாநகரா ட்சி மண்டலக் குழுத் தலை வர் சரிதா மகேஷ் குமார், இணை ஆணையர்கள் . சு. மோகனசுந்தரம், பெ.க.கவெ னிதா, துணை ஆணையர் இரா.ஹரிஹரன், கண்காணி ப்பு பொறியாளர்.எம்.பழனி, உதவி ஆணையர். கி. பாரதிரா ஜா, மாநகராட்சி உறுப்பினர். நாகராஜன், கல்லூரி முதல்வர் சி.லலிதா கலந்து கொண்டனர்

### வானகரம் அ.தி.மு.க.செயற்குழு , பொதுக் குழு கூட்டத்திற்கு வருகை தந்த

# எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு முன்னாள் அமைச்சர் பா.பென்ஜமின் தலைமையில் உற்சாக வரவேற்பு



**சென்னை, டிச, 11 -**

வானகரம் அ.தி.மு.க.செய ற்குழு மற்றும் பொதுக் குழு கூட்டத்திற்கு வருகை தந்த எடப்பாடி கே.பழனிசாமிக்கு முன்னாள் அமைச்சரும் திரு வள்ளூர் மத்திய மாவட்ட செயலாளருமான பா.பென்ஜ மின் தலைமையில் மாபெ ரும் வரவேற்பு அளிக்கப்பட் டது.

அ.தி.மு.க.வின் செயற் குழு மற்றும் பொதுக் குழு கூட்டம் நேற்று காலை 10 மணிக்கு வானகரம் ஸ்ரீவாரு திருமண மண்டபத்தில் நடெ ற்றது.இந்த கூட்டத்திற்கு நேற்று எடப்பாடி கே.பழனி சாமி வருகை தந்தார். அவரு க்கு முன்னால் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளருமான பா.பென்ஜ மின் பூச்செண்டு கொடுத்து ,பொன்னாடை போர்த்தி வர வேற்றார். இதே போல முன் னாள் அமைச்சர்கள் பி.வி.ர மணா ,மாதவரம் வி.மூர்த்தி , எஸ்.அப்துல்ரஹீம் ஆகியோர் பூச்செண்டு கொடுத்து வரவே ற்றனர்.திருவள்ளூர் தெற்கு மாவட்ட செயலாளர் வி.அ லெக்சாண்டர் , காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் வி.சோ மசுந்தரம் , அமைப்பு செயலா ளர்கள், ராயபுரம் ஆர்.மனோ , திருவேற்காடு பா.சீனிவாசன் , திருத்தணி கோ.அரி , வாலா ஜாபாத் பா.கணேசன் , முன் னாள் எம்.எல்.ஏக்கள் இரா.ம ணிமாறன் , மதனந்தபுரம் கே.பழனி , சென்னை மாநக ராட்சி எதிர்கட்சி துணை தலைவரும், 145 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான டி.சத்தியநாதன் ,பூந்தமல்லி நகர செயலாளர் கே.எஸ்.ரவி சந்திரன் , மாவட்ட பேரவை தலைவர் ஆலப்பாக்கம் லயன் இ.அரசு , வில்லிவாக்கம் ஒன் றிய செயலாளர் அயப்பாக்கம் எம்.எம்.மூர்த்தி , மாவட்ட தக வல் தொழில் நுட்ப பிரிவு துணை செயலாளர் அ.உதயகு மார் அரசு , மதுரவாயல் கிழ க்கு பகுதி செயலாளர் ஏ.தேவ தாஸ் , மாவட்ட மாணவர் அணி செயலாளர் சதிஷ் குமார் குப்புரத்தினம், வட்டச் செயலாளர்கள் எம்.தென்றல் குமார், எம்.கே.குமார், ஏ.பார த்,மேட்டுகுப்பம் தாமு(எ) தாமோதரன், ஏ.மூர்த்தி, எம். பாரதி, சி.நாகநாதன், தட்சணா மூர்த்தி,மற்றும் சி.மதன்ராஜ், ஐடி விங் ஆர்.சதிஷ்குமார், ஆ கியோர் வரவேற்றனர்.

# சென்னை போலீஸ் கமிஷ்னர் அலுவலகத்தில் புதிய மின் தூக்கி திறப்பு

**சென்னை டிச 11-**

சென்னை பெருநகர காவல் ஆணையர் அலுவலக வளாகத்தில் புதிதாக அமைக் கப்பட்டுள்ள உயர் ரக அதிந வீன வசதியுடன் கூடிய மின் தூக்கியை காவல் ஆணையர் ஆ. அருண் உத்தரவின்பேரில் கூடுதல் காவல் ஆணையர் (த லைமையிடம்) அவர்கள் பொதுமக்கள் மற்றும் காவல் துறையினர் பயன்பாட்டிற் காக திறந்து வைத்தார்.

சென்னை பெருநகர காவல் துறை, காவல் ஆணை யாளர் அலுவலகம் 8 அடுக்கு கள் கொண்ட கட்டிடத்தில் செயல்பட்டு கொண்டிருக்கி றது. 10 ஆண்டுகளுக்கும் மேலான செயல்பாட்டின் கார ணமாக பயன்பாட்டில் இரு ந்து வந்த மின்தூக்கிகள் செயல் திறன் குறைந்த நிலை யில், பயன்பாட்டில் சிரமம் இருந்து வந்தது . இதனால் காவல் துறையினர், அமைச்சு ப்பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் சிரமத்தை கருத் தில் கொண்டு புதிதாக காவல் ஆணையரகத்தின் கிழக்கு மற் றும் மேற்கு பகுதி நுழைவு வாயில்களின் அருகில் உள்ள மின்தூக்கிகளை புதியதாக மாற்றிட சென்னை பெருநகர காவல் ஆணைய ர்ஆ.அருண், உரிய நடவடிக்கை எடுத்து புதிதாக நவீன வசதிகளுடன் கூடிய 2 மின்தூக்கிகள் அமை க்கப்பட்டது. கிழக்கு பகுதி நுழைவு வாயிலில் உள்ள மின்தூக்கி சில மாதங்களுக்கு முன்னர் துவக்கி வைக்கப்ப ட்டு 20 பேர் செல்லும் வகை யில் செயல்பாட்டில் இருந்து வருகிறது. மேற்கு பகுதியில் உள்ள நுழைவு வாயிலில் புதி தாக அமைக்கப்பட்ட மின்தூ க்கியை காவல் ஆணையர் உத் தரவின் பேரில், கூடுதல் காவல் ஆணையர் (தலைமை யிடம்) விஜயேந்திர பிதாரி, காவலர்கள், அமைச்சுப்பணி யாளர்கள் மற்றும் பொதுமக் கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்த புதிய மின்தூ க்கி உயர் ரக வடிவமைப்பு டன் 13 நபர்கள் கீழ்தளம் முதல் 8வது தளம் வரை இல குவாக செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மின்தூக்கி தமி ழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம் பொறியாளர் மேற்பா ர்வையில் அமைக்கப்பட்டு, அவசரஅறிவிப்பு, தீ தடுப்பு மீட்பு சைரன் ஒலி அமைப்பு டன் தானியங்கி வசதியுடன் இயங்கும் வகையில் செயல் பாட்டுக்கு இன்று முதல் வந் துள்ளது. காவல் துறையினர், பொதுமக்கள், அமைச்சுப்ப ணியாளர்கள் புதிதாக மின்தூ க்கி அமைத்து கொடுத்த காவல் ஆணையருக்கு மகிழ் ச்சியுடன் நன்றி தெரிவித்து வருகின்றனர்.

இந்நிகழ்ச்சியில், காவல் துணை ஆணையர் பி.கீதா, காவல்துறை அதிகாரிகள் மற் றும் போலிசார் கலந்து கொண்டனர்.

# மெட்ரோ ரயில் கட்டுமான பணிக்கு வைத்திருந்த இரும்பு பொருட்கள் மற்றும் கேபிளை திருடிய மூவர் கைது

**சென்னை டிச 11-**

சென்னை, ஜமீன் பல்லாவரத்தைச் சேர்ந்த ஜாபர், என்பவர் தனியார் நிறுவனம் மூலம் துரைப்பாக்கம், ரேடியல் சாலையில், மெட்ரோ இரயில் கட்டுமானம் நடைபெறும் இடத்தில் செக்கியூரிட்டி ஆலுவலராக ஆக பணிரிந்து வருகிறார். நேற்று விடியற்காலை, இருசக்கர வாகனத்தில் வந்த 3 பேர் மேற்படி இடத்தில் கட்டுமான பணிக்காக வைத்திருந்த இரும்பு பொருட்கள் மற்றும் கேபிள்களை திருடிக் கொண்டு தப்பிச்செல்ல முயன்றவர்களை, மேற்படி ஜாபர் அங்கு பணியிலிருந்த ஊழியர் உதவியுடன் மடக்கிப்பிடித்து துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் ஒப்படைத்து புகார் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

துரைப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.விக்னேஷ், 2.தமிழரசன், 3.ரஞ்சித்குமார், ஆகிய மூவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து சுமார் 60 கிலோ இரும்பு பொருட்கள் மற்றும் 30 மீட்டர் கேபிள் மீட்பு மற்றும் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் எதிரி விக்னேஷ் மீது ஏற்கனவே 5 வழக்குகளும், தமிழரசன் மீது 3 வழக்குகளும், ரஞ்சித்குமார் மீது 2 வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.





சென்னை தேனாம்பேட்டையில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்ககத்தில் 405 பகுதி சுகாதார செவிலியர்கள் மற்றும் 117 வட்டார சுகாதார மேற்பார்வையாளர்களுக்கு பதவி உயர்வு ஆணையினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். இதில் அரசு முதன்மை செயலாளர் செந்தில்குமார், மருந்து துறை இயக்குனர் சோமசுந்தரம், ஊரக நல பணிகள் இயக்குன் சித்ரா கலந்து கொணடனர்.

# இந்திய செஞ்சிலுவை சங்கம், சென்னை மாவட்ட கிளைக்கான செயற்குழு உறுப்பினர்கள் தேர்தல் முடிவு வெளியீடு

**சென்னை டிச 11-**

இந்திய செஞ்சிலுவை சங் கம், சென்னை மாவட்ட கிளைக்கான செயற்குழு உறு ப்பினர்கள் தேர்தல் முடிவு அறிவித்துள்ளது.

சென்னை மாவட்ட ஆட் சித்தலைவர் தலைமையில் இந்திய செஞ்சிலுவை சங்கத் தின் சென்னை மாவட்ட கிளை செயற்குழு உறுப்பின ர்களுக்கான தேர்தல் வருகி ன்ற டிசம்பர் 20ம் தேதி நடை பெறும் என 22. ந் தேதியில் நாளிட்ட செய்தி வெளியீட் டில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த 01 ந் தேதி முதல் 2 ந் தேதி வரை செயற் குழு உறுப்பினர் தேர்தலுக் கான வேட்புமனுவினை சங்க உறுப்பினர்கள் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவ ட்ட ஆட்சியரின் நேர்முக உத வியர் (பொது) அவர்களிடம் தாக்கல் செய்துள்ளனர். அதன் படி, 25 இந்திய செஞ்சிலுவை சங்க உறுப்பினர்களிடமிருந்து வேட்புமனு பெறப்பட்டது.

பின்னர், வேட்புமனு பரி சீலனை சென்னை, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத் தில் 03.ந் தேதி அன்று உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் நேர் முக உதவியர் (பொது) அவர் கள் முன்னிலையில் நடைபெ ற்றது. இந்நிகழ்வில், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட 25 வேட்புமனுக் கள் பரிசீலனை செய்யப்பட் டது. இதில், தகுதியான 20 உறுப்பினர்களின் வேட்பும னுக்கள் ஏற்கப்பட்டு, பல் வேறு காரணங்களால் 5 உறு ப்பினர்களின் வேட்புமனுக் கள் நிராகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 08.ந் தேதியன்று மாலை தகுதியான நபர்கள் பட்டியல் வெளியிடப்பட் டது. இந்நிலையில், இந்திய செஞ்சிலுவை சங்க செயற் குழு உறுப்பினர்கள் தேர்த லில் போட்டியிடும் உறுப்பி னர்களின் எண்ணிக்கை 20ஆக உள்ளதால், தேர்தல் போட்டி யின்றி தேர்தல் முடிவு அறிவி க்கப்படுகிறது.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# லார்ட்ஸ் மார்க் இண்டஸ்ட்ரீஸ் ரெனாலிக்ஸ்க்கு கிளாஸ் சி உரிமம் - சிஇ சான்று

**சென்னை, டிச.11**

இந்தியாவின் மெடிகல்-டெக் துறையில் புதிய வரலா ற்றை படைத்து, லார்ட்ஸ் மார்க் இண்டஸ்ட்ரீஸ் ரெனா லிக்ஸ்க்கு கிளாஸ் சி உரிமம் அண்ட் சிஇ சான்று உலகின் முதல் AI அடிப்படையிலான ஸ்மார்ட் ஹீமோடைலிசிஸ் இயந்திரங்களை (Class C) தயா ரிக்கும் உரிமத்தை மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பா ட்டு அமைப்பான பெற்றுள் ளது. உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்களில் இந்தியா வின் தன்னிறைவை பலப்படு த்தும் முக்கியமான முன்னே ற்றமாக இது கருதப்படுகி றது.இந்த சாதனையை மேலும் வரலாற்று சிறப்பாக் குவது என்னவெனில், LMIL–R enalyx தற்போது உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட CE மார்க் கிங்கையும் பெற்றுள்ளது. இதன் மூலம் டையாலிசிஸ் அமைப்புகளுக்கான CE சான் றிதழைப் பெறும் உலகின் ஆறாவது பிராண்ட் என்ற பெருமையை நிறுவனம் பெற்றுள்ளது. CE மார்க்கிங் என்பது உயர் தரமான ஆரோ க்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தரநி லைகள் பூர்த்தி செய்யப்பட்ட தற்கான சான்றாகும். இதன் மூலம் முழு ஐரோப்பிய பொருளாதாரப் பகுதி சந்தை களில் சட்டபூர்வ அணுகல் கிடைக்கிறது.இந்த முன்னேற் றத்தின் மையத்தில் LMIL உரு வாக்கிய புதுமைச் சூழல் உள் ளது. Renalyx உடன் இணைந்து உருவாக்கப்பட்ட உலகின் முதல் AI அடிப்படையிலான ஸ்மார்ட் ஹீமோடைலிசிஸ் இயந்திரங்கள் — AI மூலம் தன்னியக்க கட்டுப்பாடு, முன் னறிவிப்பு பாதுகாப்பு எச்சரிக் கைகள், சிகிச்சை மேம்படுத் தல், நேரடி தரவு பகுப்பாய்வு போன்ற வசதிகளை வழங்கு கின்றன. இது மருத்துவ செய ல்பாடுகளில் மனித பிழை களை குறைத்து உயர் துல்லி யத்தைக் கொண்ட சிகிச் சையை வழங்க உதவுகிறது. இந்த உரிமம் இந்த உலகின் முதல் உயர் தொழில்நுட்ப இயந்திரங்களை வணிக ரீதி யாக பெருவளர்ச்சிக்கு கொண்டு வருவதற்கான முக் கிய முன்னேற்றமாகும்.இந்த சாதனையைப் பற்றி கருத்து தெரிவித்த Lords Mark Industries Ltd. நிறுவனத்தின் மேலா ண்மை இயக்குநர் சச்சிதான ந்த் உபாத்யாய கூறியதில்இ ந்த உரிமம் ஒரு ஒழுங்கு முறை அனுமதி மட்டுமல்ல; உலகின் முன்னேற்றமான மெடிகல்-டெக் துறைகளில் இந்தியா முன்னிலை வகிக் கும் திறன் கொண்டது என்ப தற்கான அங்கீகாரம். எங்கள் AI அடிப்படையிலான ஸ்மா ர்ட் ஹீமோடைலிசிஸ் இயந் திரம் மற்றும் தொடர் R&D முயற்சிகளின் மூலம், உலக ளாவிய renal care துறையை மறுபரிசீலனை செய்ய நாம் முனைவோம். இந்தியாவில் இருந்து உலகத்திற்கு சேவை செய்யக்கூடிய புத்திசாலியா ன, பாதுகாப்பான, அணுகக்கூ டிய மருத்துவ தொழில்நுட்ப ங்களை உருவாக்குவதே எங் களின் இலக்கு என்றார்.

கண், ரத்த தானம் செய்வீர்

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள் இன்று ( 11ம் தேதி ) மாலைக்குள் விண்ணப்பிக்கலாம்

**காஞ்சிபுரம், டிச. 11 --**

காஞ்சிபுரம் மாவட்டத் தில் வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள் இன்று ( 11ம் தேதி ) மாலை குள் சம்பந்தப்பட்ட தேர்தல் அலுவலர்களின் மூலம் விண் ணப்பிக்கலாம் என, மாவட்ட தேர்தல் அலுவலர்கள் தெரிவி த்துள்ளனர்.இது குறித்த காஞ் சிபுரம் மாவட்ட தேர்தல் அலுவலர்களால் வெளியிட்டு ள்ள அறிக்கை வருமாறு;''இ ந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2026 ஜனவரி 1ம் தேதியினை தகுதி ஏற்படு த்தும் நாளாக கொண்டு வாக் காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணியானது கடந்த மாதம் நாலாம் தேதி துவங்கி யது. இது தொடர்பாக காஞ்சி புரம் மாவட்டத்தின் அனை த்து அங்கீகரிக்கப்பட்ட அரசி யல் கட்சிகளின் வாக்குசாவடி நிலை முகவர்கள்-1 (BLA1) உடன் ஆலோசனை கூட்டம் கடந்த 3ஆம் தேதி நடந்தது. இதில், சட்டமன்ற தொகுதிக ளின் அந்தெந்த வாக்குப்ப திவு அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது. இதில், இறந் த, இரட்டைபதிவு, இடம் பெயர்ந்த மற்றும் கண்டறிய முடியாத வாக்காளர்களின் உத்தேச பட்டியல் பகுதி வாரி யாக அச்சிட்டு அவர்களிடம் வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, கடந்த 7ம் தேதி அன்று காஞ்சிபுரம் மாவட்ட த்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளின் 1,401 வாக்குச் சாவடி நிலையங்களிலுள்ள வாக்குச்சாவடி நிலை அலுவ லர்களால் ( BLO ) ஏற்கனவே நியமிக்கப்பட்ட அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரின் வாக்குசாவடி நிலை முகவர்களுடன் ( BLA 2 ) சிறப்பு தீவிர திருத்தம் குறி த்து கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் இறந்த, இரட்டை பதிவு, இடம் பெய ர்ந்த மற்றும் கண்டறிய முடி யாத வாக்காளர்களின் எண் ணிக்கை உத்தேசமாக கணக் கெடுப்பு செய்யப்பட்டுள்ளது என, அனைத்துக் கட்சி வாக் குசாவடி முகவர்களிடம் விவ ரங்கள் வழங்கி விரிவாக எடு த்துரைக்கப்பட்டது. மேலும், இவர்களில் எவரேனும் இப் பாகத்தில் அடங்கிய பகுதி யில் வசிப்பவராக இருப்பின் உரிய மாற்றங்கள் செய்யப்ப டும் என, தெரிவிக்கப்பட்டது. இதனை சரி பார்த்த வாக்குசா வடி நிலை முகவர்கள் மேற் கூறிய வகையிலான வாக்கா ளார் கணக்கெடுப்பு விவரங் கள் சரியே என தெரிவித்து / ஒரு சில வாக்காளர்களை அடையாளம் காட்டி எஞ்சிய வர்கள் மேற்கூறிய வகையில் சரியானது என, சான்று அளித் துள்ளனர். மேலும், காஞ்சிபு ரம் மாவட்டத்தின் நான்கு சட் டமன்ற தொகுதிகளிலும் விடுப்பட்ட வாக்காளர்கள் இன்று 11ம் தேதிக்குள் சம்ம ந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர் அல்லது உதவி வாக்காளர் பதிவு அலு வலர் அல்லது வாக்காளர் பதிவு அலுவலரை அனுகு மாறு கேட்டுக் கொள்ளப்படு கிறது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விரும்புவோர் இணையதளம் மூலமாகவோ அல்லது சம்மந்தப்பட்ட வாக் குச்சாவடி நிலை அலுவலர் மூலமாகவோ அல்லது வாக் காளர் பதிவு அலுவலர் அலு வலகங்களுக்கு நேரிடையாக சென்று படிவம் 6 கொடுத்து விண்ணப்பிக்கலாம்.

# இரு ஆட்டோக்களில் பேட்டரிகளை திருடியவர் கைது

**சென்னை டிச 11-**

சென்னை, சைதாப்பேட் டை, தாடண்டர் நகர் தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய குடி யிருப்பில் வசித்து வரும் விஸ்வநாதன், என்பவர் தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய குடி யிருப்பு அசோசியேஷன் தலைவராக உள்ளதாகவும், கடந்த 2.ந் தேதி அன்று மாலை மேற்படி குடியிருப் பில் வசிக்கும் கோவிந்தராஜ் என்பவர் தனது ஆட்டோவை நிறுத்திவிட்டு மீண்டும் இரவு வந்து பார்த்தபோது, அவரது ஆட்டோவிலிருந்த பேட்ட ரியை யாரோ திருடிச் சென்ற தாகவும், இதே போல, 23.ந் தேதி அன்று அக்குடியிருப் பில் வசிக்கும் பெரியசாமி என்பவரது ஆட்டோவிலிரு ந்த பேட்டரியை யாரோ திரு டிச் சென்றதாகவும், மேற்படி பேட்டரி திருட்டுகளில் ஈடுப ட்ட நபரை கண்டுபிடித்து நட வடிக்கை எடுக்கும்படியும், விஸ்வநாதன், சைதாப்பே ட்டை காவல் நிலைய குற்றப் பிரிவில் கொடுத்த புகாரின் பேரில், போலீசார் வழக்குப்ப திவு செய்து, விசாரணை மேற் கொண்டனர். சைதாப் பேட்டை காவல் நிலைய குற் றப்பிரிவு ஆய்வாளர் தலை மையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி 2 திருட்டு சம்பவங் களிலும் ஈடுபட்ட எதிரி ஹரி கிருஷ்ணன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 பேட்டரி பறிமுதல் மீட்கப்ப ட்டது விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி ஹரிகிருஷ்ணன் மீது ஏற்க னவே குமரன் நகர் காவல் நிலையத்தில் ஒரு திருட்டு வழக்கு உள்ளது தெரியவந் தது.கைது செய்யப்பட்ட எதிரி ஹரிகிருஷ்ணன் விசாரணைக் குப் சிறையில் அடைக்கப்பட் டார்.

ஈரோடு சென்னிமலை

# ரூ.5.48 கோடி மதிப்பீட்டில் சாலை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி

## அமைச்சர் சு.முத்துசாமி நேரில் ஆய்வு




ஈரோடு டிச 11-

ஈரோடு சென்னிமலை சாலையில் நெடுஞ்சாலைதுறையின் சார்பில் இருவழிச் சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப் படுத்தும் பணி மற்றும் வாய்க்காலில் நான்கு வழிப்பாலம் அமைக்கும் பணி என ரூ.5.48கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டுஆய்வு செய்தார்.

அமைச்சர் சு.முத்துசாமி, சென்னிமலை சாலையில் உள்ள கே.கே.நகர் நுழைவு பாலம் கூடுதல் நுழைவுபாலம் அமைத்தல் மற்றும் தனியாக கழிவுநீர் கால்வாய் அமைப்பது தொடர்பாகவும்,மேலும் சென்னிமலை சாலையில் ரூ.5.48 கோடி மதிப் பீட் டில் ம கா ராஜா தியேட்டர் அருகில் உள்ள வாய்க்காலில்நான்கு வழிப் பாலம் அமைக்கும் பணி மற்றும் சென்னிமலை சாலை, ஆவின் மாட்டு தீவின ஆலையிலிருந்து மகாராஜா தியேட்டர் வரை இரு வழிச்சாலையினை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்ட நிலையில், நடைபெற்று வரும் பணிகளை வீட்டுவசதி, மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, கொல்லம்பாளையம் ரயில்வே நுழைவுப்பாலத்தில் கழிவு நீர் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் பராமரிப்பு பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுகளின்போது, கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரக்குமார், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், கோட்ட பொறியாளர் (நெடுஞ்சாலை துறை) ரமேஷ் கண்ணா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நீலகிரியில் மூன்று தொகுதிகளில் போட்டியிட காங்கிரஸ் விருப்ப மனு விநியோகம் தொடங்கியது

ஊட்டி,டிச.11-

நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டி, குன்னூர், கூடலூர்(தனி) தொகுதிகளில் போட்டியிட விரும்பும் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு விருப்ப மனு விநியோகம் தொடங்கியது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு சட்டப் பேரவை தேர்தல், 234 தொகுதிகளிலும் போட்டியிட விரும்பும் காங்கிரஸ் உறுப்பினர்கள் விருப்பமனு நேற்று முதல் வினியோகம் தொடங்கியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், ஊட்டி, குன்னூர், கூடலூர்(தனி) தொகுதிகளில் போட்டியிட விரும்பும் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு விருப்ப மனு நேற்று முதல் வினியோகிக்கப்பட்டது.

ஊட்டியில் உள்ள நீலகிரி காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில்

நீலகிரி மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஆர்.கணேஷ், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டி. நாகராஜ் ஆகியோர் விருப்ப மனுக்களை வழங்கி, விநியோகத்தை தொடங்கி வைத்தனர்.

வரும் 15ம் தேதி மாலை 5 மணி வரை போட்டியிட விரும்பும் சட்டப்பேரவைத் தொகுதியை குறிப்பிட்டு விருப்ப மனுவை வழங்கலாம். மாவட்ட அலுவலகத்தில் மாநில பொதுக்குழு உறுப்பினர் ரகு சுப்பன், மாவட்ட பொதுச்செயலாளர் உல்லத்தி ரவி, ஊட்டி நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் நித்யசத்யா, மாவட்ட பொதுச்செயலாளர் உதகை ரவிக்குமார் ஆகியோர் விருப்ப மனுக்களை பெற்றுக்கொள்வார்கள் என மாவட்ட தலைவர் கணேஷ் தெரிவித்தார்.

விருப்பமனு வழங்கும் நிகழ்ச்சியில், மாநில பொதுக்குழு உறுப்பினர் ரகுசுப்பன், ஊட்டி நகரத்தலைவர் நித்ய சத்யா, குந்தா வட்டாரத்தலைவர் கிழ்குந்தா ஆனந்த், மாவட்ட பொதுச்செயலாளர்கள், ஊட்டி ரவிக்குமார், மேலூர் நாகராஜ், நேரு, உல்லத்திரவி, சமூக ஊடகப்பிரிவு மாவட்ட பொதுச்செயலாளர் ஷ்யாம், மகேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், நெல்லியாளம் கிராமத்தில். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் ரூ.450 லட்சம் மதிப்பீட்டில் 2500 மெ.டன் கொள்ளளவு கொண்ட புதிய வட்ட செயல்முறை கிடங்கினை அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன் குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார். உடன் கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் குணசேகரன், மண்டல மேலாளர் (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம்)கவுரி மணவாளன் நெல்லியாளம் நகர்மன்ற தலைவர் சிவகாமி நகராட்சி ஆணையாளர் சக்திவேல் உள்ளனர்.

# தங்கள் வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மாற்றும் சிறந்த 3 பள்ளிகள், கல்லூரிகள், வணிக நிறுவனங்களுக்கு பரிசு

## விண்ணப்பித்து பயன்பெற நீலகிரி கலெக்டர் அழைப்பு

ஊட்டி, டிச.11-

தங்கள் வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மாற்றும் சிறந்த 3 பள்ளிகள், 3 கல்லூரிகள், 3 வணிக நிறுவனங்களுக்கு பரிசு வழங்கப் பட உள்ளதால் விண்ணப்பித்து பயன்பெற நீலகிரி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர், 2022-23 நிதியாண்டிற்கான மஞ்சப்பை விருதுகளை சட்டமன்றக் கூட்டத்தில் அறிவித்தார். ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகள் மீதான தடையை திறம்பட செயல்படுத்தி, ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் கைபைகள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றுகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்து, மஞ்சப்பை போன்ற பாரம்பரிய சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளின் பயன்பாட்டை மீண்டும் உயிர்ப்பித்து, தங்கள் வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மாற்றும் சிறந்த 3 பள்ளிகள், 3 கல்லூரிகள் மற்றும் 3 வணிக நிறுவனங்களுக்கு இது வழங்கப்படும். முதல் பரிசாக ரூ. 10 லட்சம், இரண்டாம் பரிசாக ரூ. 5 லட்சம் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ. 3 லட்சம் பரிசு வழங்கப்படும்.இந்த அறிவிப்பின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றாகப் சுற்றுச் சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்கள் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும், தங்கள் வளாகங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் ஆக்கப்பூர்வமான முயற்சிகள் மூலம் தடையை அமல்படுத்துவதற்கும், வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மாற்றுவதற்கும் முன்மாதிரியான பங்களிப்பைச் செய்த பள்ளிகள்ஃ கல்லூரிகள்ஃவணிக நிறுவனங்களுக்கு மஞ்சப்பை விருதுகளை வழங்க முன்மொழிகிறது.விண்ணப்பப் படிவங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக இணையதளத்திலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்திலும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.விண்ணப்பங்களின் அனைத்து இணைப்புகளிலும் தனிநபர்ஃ அமைப்புத் தலைவர் முறையாக கையொப்பமிட வேண்டும். விண்ணப்பங்களின் மென் நகலுடன், இரண்டு அச்சுப் பிரதிகள் (கடின நகல்) மாவட்ட கலெக்டரிடம்; சமர்ப்பிக்கப்பட வேண்டும். சமர்ப்பிக்க வேண்டிய கடைசி தேதி 15.01.2026 என மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# மனித உரிமைகள் தின உறுதிமொழி: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் ஏற்பு




ஊட்டி, டிச.11-

நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் அனைத்து துறை அலுவலர்கள் மனித உரிமைகள் தின உறுதிமொழியினை நேற்று ஏற்றுக் கொண்டனர்.

இந்த உறுதிமொழியில், இந்திய அரசியலமைப்பு சட்டத்திலும், இந்தியாவில் செயல்படுத்ததக்க பன்னாட்டு சட்டங்களிலும் வரையறுக்கப்பெற்ற மனித உரிமைகள் குறித்து உண்மையுடனும், பற்றுறுதியுடனும் நடந்து கொள்வேன் என்று நான் உளமார உறுதி மொழிகிறேன். எவ்வித வேறுபாடுமின்றி, அனைவரின் மனித உரிமைகளைப் மதித்து நடப்பதுடன், மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில், நான் என்னுடைய கடைமைகளை ஆற்றுவேன். என்னுடைய எண்ணம் சொல் அல்லது செயல் மூலம், பிறருடைய மனித உரிமைகளை மீறுகிற எந்தவொரு செயலையும், நேரடியாகவோ மறைமுகமாகவோ செய்ய மாட்டேன். மனித உரிமைகள் மேம்படுத்துவதறற்கு நான் எப்போதும் ஆயத்தமாக இருப்பேன் என்று உளமார உறுதி கூறுகிறேன் என்ற உறுதிமொழியினை அனைத்து துறை அலுவலர்களும் மாவட்ட கலெக்டர் தலைமையில் ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளார்கள்; லோகநாயகி (பொது), கண்ணன் (கணக்குகள்), வாணி (வளர்ச்சி) உட்பட அரசுத்துறை அலுவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பழனி முருகன் கோயிலுக்கு ரூ.1.11 கோடி மதிப்பிலான நாட்டுச் சர்க்கரை, வெல்லம் கொள்முதல்

ஈரோடு, டிச. 11:

பழனி, தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு ரூ. 1.11 கோடி மதிப்பிலான நாட்டுச் சர்க்கரை மற்றும் வெல்லம் நேற்று முன்தினம் கொள்முதல் செய்யப்பட்டது.

பழனி, தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு பஞ்சாமிர்தம் உள்ளிட்ட பிரசாதங்கள் தயாரிக்க ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இருந்து கரும்புச் சர்க்கரை எனப்படும் நாட்டுச் சர்க்கரை மற்றும் வெல்லம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதற்காக நடைபெற்ற ஏலத்தில் பங்கேற்க சுற்று வட்டாரப் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 4,117 மூட்டைகள் நாட்டுச் சர்க்கரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், 60 கிலோ எடையிலான மூட்டை, முதல் தரம், குறைந்தபட்ச விலையாக ரூ. 2,835க்கும், அதிகபட்ச விலையாக ரூ. 2,910க்கும் விற்பனையானது.

இரண்டாம் தரம், குறைந்தபட்ச விலையாக ரூ. 2,670க்கும், அதிகபட்ச விலையாக ரூ. 2,700க்கும் விற்பனையானது. இதில், மொத்தம் 2 லட்சத்து 42 ஆயிரத்து 340 கிலோ எடையிலான 4,039 நாட்டுச் சர்க்கரை மூட்டைகள் விற்பனையாகின.

இதன் விற்பனை மதிப்பு ரூ. 1 கோடியே 9 லட்சத்து 54 ஆயிரத்து 440 ஆகும்.

இதே போல, உருண்டை வெல்லம் முதல் தரம் 30 கிலோ சிப்பம், முதல் தரம், குறைந்தபட்ச விலையாக ரூ. 1,620க்கும், அதிகபட்ச விலையாக ரூ. 1,740க்கும் விற்பனையாகின.

மொத்தம் 2 ஆயிரத்து 940 கிலோ எடையிலான 98 மூட்டைகள் விற்பனையாகின. இதன் மதிப்பு ரூ. 1 லடசத்து 68 ஆயிரத்து 360 ஆகும்.

நாட்டுச் சர்க்கரை, வெல்லம் இரண்டும் சேர்த்து மொத்தம் ரூ. 1 கோடியே 11 லட்சத்து 22 ஆயிரத்து 800க்கு கொள்முதல் செய்யப்பட்டதாக விற்பனைக்கூட கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# ஊட்டியில் அரசு மருத்துவ கல்லூரி மற்றும் தனியார் பள்ளிக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல்

## மோப்ப நாய் உதவியுடன் போலீசார் சோதனை

ஊட்டி, டிச.11-

சிந்தூர் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறி, ஊட்டியில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் பிரபல தனியார் பள்ளிக்கு வெ டிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதால் மாணவ மாணவிகள் பீதி அடைந்தனர்.

தமிழகம் முழுவதும் மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதன்படி சர்வதேச சுற்றுலாத்தலமான நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக நட்சத்திர விடுதிகள் மற்றும் அரசு மருத்துவமனை மற்றும் கவர்னர் மாளிகைக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தநிலையில் அரசு மருத்துவக் கல்லூரிக்கும், தாவரவியல் பூங்கா பகுதியில் உள்ள பிரபல தனியார் பள்ளிக்கும் இ- மெயில் மூலம் நேற்று வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. வழக்கமாக பல்வேறு அரசியல் காரணங்கள் மற்றும் மத சம்பந்தமான தகவல்கள் இடம்பெற்றிருக்கும் நிலையில், இந்த முறை ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து இதுபோல் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டுள்ளது என இ-மெயிலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து மருத்துவக் கல்லூரி நிர்வாகத்தினரும் தனியார் பள்ளி நிர்வாகத்தினரும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து வெடிகுண்டு தடுப்பு பிரிவு போலீசார் மோப்பநாய் மற்றும் மெட்டல் டிடெக்டர் உதவியுடன் வெடிகுண்டு நிபுணர்கள் உட்பட போலீசார் மருத்துவக் கல்லூரி வளாகம், சமையலறை, தங்கும் விடுதிகள், கழிப்பறை உள்ளிட்ட அனைத்து இடத்திலும் தீவிர சோதனை நடத்தினர். இதேபோல் தனியார் பள்ளியிலும் சோதனை நடத்தினர். சோதனைகள் முடிவில் புரளி என்று தெரிந்ததால் அனைவரும் நிம்மதி அடைந்தனர்.

முன்னதாக மருத்துவக் கல்லூரி மற்றும் தனியார் பள்ளியில் இருந்து மாணவர்கள் வெளியேற்றப்பட்டதால் ஒருவித பீதியுடன் இருந்தனர்.

இது குறித்து போலீசார் கூறுகையில், விபிஎன் மூலம் மின்னஞ்சல் அனுப்பப்படுவதால், மர்மநபர்களின் இடத்தை சரியாக அடையாளம் காண முடியவில்லை. இந்தப் பிரச்சனை நாடு முழுவதும் தொடர்கிறது, விரைவில் மர்மநபர்களை அடையாளம் காணும் தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்படும் என்றனர்.

# பைகமந்து கிராமத்தை தொட்டபெட்டா ஊராட்சிக்கு மாற்றித் தர வலியுறுத்தி கலெக்டர் அலுவலகத்தில் பொதுமக்கள் மனு

ஊட்டி, டிச.11-

நீலகிரி மாவட்டம் ஊட்டி அடுத்த பைகமந்து கிராம மக்கள் ஊர் தலைவருடன் வந்து கலெக்டர் அலுவலகத்தில் கொடுத்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:-

பைகமந்து ஊரில் 180 குடும்பங்கள் வாழ்ந்து வருகிறோம். எங்கள் ஊர் தற்போது வரை குன்னூர் தாலுகா மற்றும் கேத்தி பஞ்சாயத்தில் உள்ளது. இதன்படி அரசு சேவைகளுக்கான சான்றிதழ்கள் பெறுவது உள்பட பல்வேறு சேவைகளுக்காக நாங்கள் அரசு அலுவலகங்களுக்கு செல்ல வேண்டும் என்றால் குன்னூர் 35 கிலோமீட்டர் தூரத்திலும் கேத்தி 25 கிலோமீட்டர் தூரத்திலும் உள்ளது. இதன் காரணமாக அலைச்சல் அதிகமாக இருப்பதால் பைகமந்து கிராமத்தை தொட்டபெட்டா ஊராட்சியுடன் இணைக்க நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறோம். எங்கள் ஊருக்கு சொந்தமான சுமார் 100 ஏக்கர் நிலம் தொட்டபெட்டா பஞ்சாயத்தில் உள்ளது. எங்களுக்கு வாக்கு, ஊட்டி சட்டமன்ற தொகுதியில் வருகிறது. எங்கள் ஆதார் கார்டு முகவரியில் குன்னூரும் ரேஷன் கார்டு முகவரியில் ஊட்டியும் உள்ளது.எனவே இந்த பிரச்சனைக்கு தீர்வு காண வலியுறுத்தி 2018 தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்தோம். அப்போது அரசு அதிகாரிகள் எங்களிடம் பேசி பிரச்சனைக்கு தீர்வு காண்பதாக உறுதி அளித்ததால் தேர்தலில் ஓட்டு போட்டோம்.இந்த நிலையில் சமீபத்தில் நீலகிரியில் 88 கிராம பஞ்சாயத்துகள் மறு உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில் எங்கள் பைகமந்து கிராமம் இடம்பெறவில்லை. எனவே பைகமந்து கிராமத்தை கேத்தி பேரூராட்சியில் இருந்து பிரித்து தொட்டபெட்டா ஊராட்சியில் சேர்க்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**BEFORE THE IV ASST. JUDGE CITY CIVIL COURT AT CHENNAI**
**O.S.NO. 8443OF 1986**

Arulmigu Sivasubramania Swamy Devasthanam, Rep. by its Executive Officer
...Plaintiffs
-Vs-
V. Janarthanam Chettiar and 15 others
.. Defendants

To,
1. V. Janarthanam Chettiar, D-1 No:62, Karneeswarar Koil Street, Mylapore, Chennai-600004
2. Jayammal, D-2 No:78, Nainiappan Street, Mannady, Chennai-600001
3. Rajendran D-3
4. Selvaraj D-10 both residing at No:10, Nainiappan Street, Mannady, Chennai-600001
5. Loganathan, D-12
6. Banumathi, D-13 Both residing at No:78, Nainiappan Street, Mannady, Chennai-600001
7. V. Vishnukumar - D-14 No:2, 8th Main Road, MKB Nagar, Chennai-600039.
8. Mr. V. Seshadri Chettiar, D-15 No:19/1, Valluvar Street, Ottery, Chennai-600012
9. Mrs. M. Rama Seethammal, D-16 No.J-4, MGM Garden 1st Street, Old Washermanpet, Chennai-600 021
10. Mrs. E. Kothainayaki, D-17 No:10, Shari Amman Koil Street, Tondiarpet, Chennai-600 081

Please take notice that in the above Suit filed by the Plaintiff for declaration that the property bearing No:10, Nainiappan Street, Mannady, Chennai-600001, belongs to the temple and for the possession of the same is posted for De Novo Trial and for your appearance on 21.01.2026 before IV Asst. Judge City Civil Court, Chennai. Please take notice that if you fail to appear either by yourself or through your pleader on 21.01.2026 at 10.30 am when the above suit comes up for hearing the suit is likely to be heard and decided ex-parte.

S.D.Ramalingam
D.R.Sivakumar
Counsel for Plaintiff

**BEFORE THE HON'BLE II ASSITANT CITY CIVIL COURT AT CHENNAI**
**O.S. No.6038 of 2024**

M/s. SLSB Finmart
Rep. by Managing Partner Mr. Bhavesh Betala
Rep. by his POA Agent
Mrs.N.Mahalakshmi
...Plaintiff
-Vs-
S.Vijaya Raghavan
S/o.Srinivasan
...Defendant

To
S.Vijaya Raghavan
S/o.Srinivasan,
Plot No.43, G1 Sorgam Nest, Gandhi Street, VGP Part II Layout, Uthandi, Chennai – 600119.

Take notice that in the above suit taken out by the Plaintiff, the Hon'ble II Assistant City Civil Court, Chennai, has by order dated 10.12.2025, ordered notice to you, directing you to be present before the Hon'ble Court on 09.01.2026. You are hereby called upon to appear before the Hon'ble II Assistant City Civil Court, Chennai, on 09.01.2026 at 10.30 a.m. either in person or through a pleader duly instructed, failing which you will be called absent, set ex-parte and the above case will be decided in your absence.

S.HARIPRASAD
A.MAGESHWARI
Counsel for Plaintiff

**IN THE COURT OF THE PRINCIPAL SUBORDINATE JUDGE, HOSUR**
**I.A.No. 9/2025 IN O.S.No. 31 / 2012**

1. Papamma (Died)
2. Anjina Reddy
3. Aswatha Reddy @ Aswath Narayana Reddy
4. Sreenivasa Reddy
5. Chinnamma @ Lalithamma
6. Vasantha
7. Amaravathi
8. Sakunthala
9. Padma
10. Prabhavathi

R/o Kempasandiram Village, Avalapally Post, Hosur Taluk, Krishnagiri District.
...... Petitioners / Plaintiffs
/Versus/
Kusalraj, S/o Lal Chandji B.Kadia, R/o Door no.9, Travelianbasin Street, Sowkarpet, Chennai-600 079.
....... Respondent no.67 / Proposed party to be impleaded

NOTICE

The petitioners filed the above suit for partition, separate possession and other reliefs. Due to the transactions pertaining to the suit properties, you were impleaded as party defendants as per order in I.A.No.6/2024 and the same was allowed and accordingly, the petitioners filed the above to amend the plaint and the same is posted for your appearance on 17.12.2025. If you have got any objection, you can do so either in person or through your counsel on 17.12.2025 at 10:30am. Failing which order will be passed in the above petition.

// Court Orders //
R.Venkataswamy, B.Sc., LL.B.,
B.R.Swetha, LL.M.,
Advocates, Krishnagiri.

**BEFORE THE VII ADDITIONAL FAMILY COURT AT CHENNAI**
**H.M.O.P.No. 2716 of 2025**

O.BALAJI
... Petitioner
Vs
K.N.VANITHA
... Respondent

To.
K.N.Vanitha,
D/o. Late Kunu Narayanaswamy Chetty,
Old No. 62/2, New No. 90,
Seven Wells Street,
Seven Wells,
Chennai – 600 001
... Respondent

Madam,
Please take notice that the Petitioner has filed H.M.O.P. No. 2716 of 2025 against you for Divorce on the grounds of Cruelty and Desertion. The case is posted on 21.01.2026 at 10:30 a.m. before the Hon'ble VII Additional Family Court, Chennai, for your appearance. If you fail to appear, the matter will be decided in your absence.

O.BALAJI
(Petitioner-in-Person)

**IN THE COURT OF SPL –I JUDGE SMALL CAUSES COURT AT CHENNAI**
**M.C.O.P.NO. 3409 OF 2025**

1.Deivakunjari
2.Banumathi @ Nandhini
....Petitioner
-Vs-
1.Jackson Enterprises,
2.The New India Assurance Co. Ltd. ....Respondents

To
Jackson Enterprises,
No,21,Thiruneermalai Main Road,
Kamarajapuram ,Anakapthur
Chengalpattu - 600070
... 1 Respondent

Take notice that the above claim petition came up on 08.12.2025 before the Hon'ble Chief Judge Small Causes Court for hearing and the Hon'ble Court was pleased to order notice to you returnable by 09.01.2025. Ensure your presence before the said court on 09.01.2025 at 10.30 a.m. either in person or through pleader without fail, failing which, the petition will be decided in your absence.

C.Thangaraju
Counsel for Petitioner

**மாண்புமிகு மாவட்ட முதன்மை நீதிமன்றம் திருவள்ளூர்**
**H.M.G.O.P. No. 355 of 2025**

மைனர்: B. தனவ்
வயது: 12
S.புவனேஷ்
த/பெ. லேட் D. சங்கர் பாபு
காவியம் தெரு, சிவம் நகர், ராஜாஜிபுரம், பெரியகுப்பம் கிராமம், திருவள்ளூர் தாலுக்கா & மாவட்டம்.
.... மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் மேற்படி கோர்ட்டில் மைனர் B. தனவ், வயது 12 மைனரின் சொத்தான திருவள்ளூர் மாவட்டம், மேலண்டைப்பாக்கம் கிராமம், காந்தி ரோடு, பிளாட் நம்பர்: 3, கதவு: 5, தீபாதீ அம்மன் கோயில் தெரு, திருத்தணி விஸ்தீரணம் 1000 சதுரடி மைனருக்குண்டான பங்கினை மைனருக்காக விற்க வேண்டி அனுமதி வேண்டி மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளேன். இம்மனுவானது வருகிற 2.1.2026 அன்று ஆட்சபனைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி கோர்ட்டில் மேற்படி தேதியில் காலை 10.30 மணிக்கு ஆஜராகி ஆட்சபனை தெரிவிக்கலாம்.

D.S. ரமேஷ்
மனுதாரரின் வழக்கறிஞர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**தமிழ்நாடு அரசு**
**பொதுப்பணித்துறை**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 86/2025– 2026/க(க&ப)வ–1/சென்னை/ நாள்: 09.12.2025**
**ஒப்பந்தம்–Lumpsum (இணையதள வழியில் மட்டும்) (ஒருஉறைமுறை)**

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்-1, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு இலட்சங்களில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை-8, எழும்பூரில் உள்ள ஐஓஜி அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் தற்போதுள்ள புற்றுநோய் பிளாக்கின் மேல் கூடுதல் தளம் கட்டும் பணி | ரூ.98.66 இலட்சங்கள் | ரூ.60,000/- 6 (ஆறு) மாதங்கள் | பொதுப்பணித் துறையில் பதிவு பெற்ற வகுப்பு -4 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |

1) ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in. 2) பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள். 26.12.2025. 3) இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 30.12.2025 மாலை 3.00 மணி வரை 4) பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 30.12.2025 மாலை 4.00 மணி 5) ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5.
செமதொஇ/6547/ஒப்பந்தப்புள்ளி/2025

**தமிழ்நாடு அரசு**
**பொதுப்பணித்துறை**
**ஒப்பந்தம்-C-FORM / ITEM RATE (இணையதள வழியில் மட்டும்)**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்.85/2025–2026/க(க&ப)வ–1/சென்னை/நாள்: 09.12.2025**

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ.எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு லட்சங்களில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| ஒரு உறை முறை | | | | |
| 1 | சென்னை–14, ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில், OP பிளாக் மற்றும் விபத்துத் தடுப்புப் பிரிவில் மின் தூக்கியை புதுப்பித்தல் செய்யும் பணி | ரூ. 123.40 இலட்சங்கள் | ரூ.72,000/- 4 (நான்கு) மாதங்கள் | பொதுப்பணித்துறையில் பதிவு பெற்றவகுப்பு–4 மற்றும் அதற்கு மேல் (திருத்தியவகுப்பின்படி) with ESB License holders / Reputed Firms (Having previous experience & Undertaking from Reputed Lift Dealer/ manufacturer possessing the Certificate of Registration in the Approved list for erection and maintenance of Lifts issued by CEIG) |

குறிப்பு: 1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in. 2. பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள்: 26.12.2025. 3. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 30.12.2025 மாலை 3.00 மணி வரை. 4. பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 30.12.2025 மாலை 4.00 மணி. 5. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5.
செ.ம.தொ.இ / 6451 / ஒப்பந்தப்புள்ளி / 2025

## ஐ.சி.சி. ஒருநாள் பேட்டர்கள் தரவரிசை:

# 2-வது இடத்திற்கு கோலி முன்னேற்றம்



**துபாய், டிச. 11-**

ஐ.சி.சி. ஒருநாள் பேட்டர்கள் தரவரிசை பட்டியலில் இந்திய முன்னணி வீரர் 2 இடங்கள் முன்னேறி கோலி 2-வது இடத்தை பிடித்துள்ளார்.

**தொடரை வென்றது...**

இந்தியா - தென் ஆப்பிரிக்கா கிரிக்கெட் அணிகள் இடையே 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்றது. இதில் ராஞ்சியில் நடந்த தொடக்க ஆட்டத்தில் இந்தியா 17 ரன் வித்தியாசத்திலும், ராய்ப்பூரில் நடந்த 2-வது ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்கா 4 விக்கெட் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகளில் தொடர் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி ஆந்திரா மாநிலம் விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது. இதில் இந்திய அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது.

**புதிய பட்டியல்...**

இந்த தொடரில் 2 சதம் மற்றும் ஒரு அரைசதத்துடன் மொத்தம் 302 ரன்கள் குவித்து அசத்திய விராட் கோலி தொடர் நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். இந்நிலையில் இந்த தொடர் நிறைவடைந்ததை அடுத்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஒருநாள் போட்டிகளில் வீரர்களுக்கான புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் இந்திய வீரர் ரோகித் சர்மா (781 புள்ளிகள்) முதலிடத்தில் தொடர்கிறார். தென் ஆப்பிரிக்க தொடரில் அசத்திய விராட் கோலி (773 புள்ளிகள்) இரு இடங்கள் முன்னேறி 2-வது இடத்தை பிடித்துள்ளார். இவருக்கும் முதலிடத்தில் உள்ள ரோகித்துக்கும் வெறும் 8 புள்ளிகள் மட்டுமே வித்தியாசம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

**ரஷித் கான் முதலிடம்...**

இதன் காரணமாக டேரில் மிட்செல் ஒரு இடம் சரிந்து 3-வது இடத்திற்கும், இப்ராஹிம் சத்ரான் ஒரு இடம் சரிந்து 4-வது இடத்திற்கும் தள்ளப்பட்டுள்ளனர். இந்திய தரப்பில் சுப்மன் கில் 5-வது இடத்திலும், ஸ்ரேயாஸ் ஐயர் 10-வது இடத்திலும் உள்ளனர். பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் ரஷித் கான் மாற்றமின்றி முதலிடத்திலும் ஆர்ச்சர் 2-வது இடத்திலும் மாற்றமின்றி தொடருகின்றனர். இதில் குறிப்பிடத்தக்க மாற்றமாக இந்தியாவின் குல்தீப் யாதவ் கிடுகிடுவென 3 இடங்கள் எகிறி 3-வது இடத்தை பிடித்துள்ளார். இந்திய தரப்பில் இவர் மட்டுமே டாப்-10 இடத்திற்குள் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஒருநாள் கிரிக்கெட் ஆல் ரவுண்டர்கள் வரிசையில் மாற்றமில்லை. அஸ்மத்துல்லா ஓமர்சாய் முதலிடத்தில் தொடருகிறார். இந்திய தரப்பில் அக்சர் படேல் 10-வது இடத்தில் உள்ளார்.

## தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக வெற்றி:

# இந்திய அணி புதிய சாதனை



**சென்னை, டிச. 11-**

தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக வெற்றி மூலம் இந்திய அணி புதிய சாதனை படைத்துள்ளது.

**அபார வெற்றி....**

இந்தியா தென் ஆப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதல் டி20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் 9-வது முறையாக இந்தியா 100 ரன்னுக்கு வெற்றியை பெற்று சாதனை படைத்தது. ஐ.சி.சி. முழு நேர உறுப்பினர்களின் வேறு எந்த அணியும் 9 முறை இது மாதிரியான வெற்றியை பெற்றது கிடையாது. மற்ற அணிகள் 4 தடவைதான். 100 ரன்னுக்கு மேல் வெற்றி பெற்றுள்ளன.

**கனடா அணி...**

கனடா அணி அதிகபட்சமாக 10 தடவை 100 ரன்னுக்கு மேல் வெற்றி பெற்றுள்ளது. இந்திய அணி 2023-ம் ஆண்டு நியூசிலாந்தை 168 ரன் வித்தியாசத்தில் வீழ்த்தியதே மிகப்பெரிய வெற்றியாகும். தென் ஆப்பிரிக்கா 6-வது முறையாக இது மாதிரியான தோல்வியை தழுவியது. வேறு எந்த ஐ.சி.சி. முழு நேர நாடுகளும் இப்படி தோற்றது இல்லை. இந்தியாவிடம் மட்டும் 3-வது தடவையாக 100 ரன்னுக்கு மேல் தோற்றது. 74 ரன்னில் சுருண்டது தென் ஆப்பிரிக்காவின் குறைந்தபட்ச ஸ்கோராகும்.

**புவனேஷ்வர்...**

2 விக்கெட் கைப்பற்றியதன் மூலம் அர்ஷ்தீப் சிங், புவனேஷ்வர் குமாரின் சாதனையை சமன் செய்தார். முதல் 6 ஓவரில் (பவர் பிளே) புவனேஷ்வர் குமார் 47 விக்கெட்டுகளை (1152 பந்துகள்) வீழ்த்தி இந்திய வீரர்களில் முதல் இடத்தில் உள்ளார். அர்ஷ்தீப் சிங் 750 பந்துகளில் 47 விக்கெட்டுகளை கைப்பற்றி சமன் செய்தார். பும்ரா முதல் 6 ஓவரில் 33 விக்கெட் (840 பந்து) எடுத்து 3 -வது இடத்தில் உள்ளார்.

## 3 வகை கிரிக்கெட்டிலும் 100 விக்கெட்டுகள்:

# ஜஸ்ப்ரிட் பும்ரா புதிய சாதனை



**புவனேஷ்வர், டிச. 11-**

டெஸ்ட், ஒருநாள், டி20 ஆகிய 3 வகை கிரிக்கெட்டிலும் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய வீரர் என்ற வரலாற்று சாதனையை பும்ரா படைத்துள்ளார்.

இந்தியா - தென் ஆப்பிரிக்கா முதல் டி20 போட்டி ஒடிசாவின் கட்டாக்கில் நடைபெற்றது. இதில் தென் ஆப்பிரிக்காவை 101 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா அபார வெற்றிபெற்றது. இந்நிலையில், இந்த போட்டியில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதன் மூலம் இந்திய கிரிக்கெட் வரலாற்றில் அனைத்து வகை கிரிக்கெட்டிலும் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய வீரர் என்ற பெருமையை பும்ரா பெற்றுள்ளார். பும்ரா டெஸ்ட்டில் 234 விக்கெட்டுகள், ஒருநாள் கிரிக்கெட்டில் 149 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ள நிலையில் நேற்று முன்தினம் நடந்த டி20 போட்டியில் 2 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் டி20 கிரிக்கெட்டிலும் 100 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் டெஸ்ட், ஒருநாள், டி20 ஆகிய 3 வகை கிரிக்கெட்டிலும் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய வீரர் என்ற வரலாற்று சாதனையை பும்ரா படைத்துள்ளார்.

## ஆஷஸ் 3-வது டெஸ்ட்:

# ஆஸி., அணியில் கம்மின்ஸ்

**அடிலெய்டு, டிச. 11-**

இங்கிலாந்துக்கு எதிரான 3-வது டெஸ்ட் வருகிற 17-ந்தேதி அடிலெய்டில் தொடங்கவுள்ள நிலையில் முதுகுவலி காயத்தில் இருந்து மீண்டுள்ள கேப்டன் பேட் கம்மின்ஸ் ஆஸ்திரேலிய அணிக்கு மீண்டும் திரும்பியுள்ளார்.

2-0 என்ற கணக்கில்...

இங்கிலாந்துக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் முதல் இரு டெஸ்டில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்று 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3-வது டெஸ்ட் வருகிற 17-ந்தேதி அடிலெய்டில் தொடங்குகிறது.

மீண்டும் அணியில்...

இந்நிலையில் இந்த போட்டிக்கான ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. முதுகுவலி காயத்தில் இருந்து மீண்டுள்ள கேப்டன் பேட் கம்மின்ஸ் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார். அத்துடன் அவரே கேப்டனாகவும் நியமிக்கப்பட்டுள்ளார். ஆஷஸ் 3-வது டெஸ்ட் போட்டிக்கான ஆஸ்திரேலிய அணி விவரம்: பேட் கம்மின்ஸ் (கேப்டன்), ஸ்காட் போலண்ட், அலெக்ஸ் கேரி, பிரெண்டன் டாகெட், கேமரூன் கிரீன், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபுஸ்சேன், நாதன் லயன், மைக்கேல் நெசர், ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டார்க், ஜேக் வெதரால்ட், பியூ வெப்ஸ்டர்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தூணை ஆய்வு செய்த தொல்லியல்துறை குழு

**மதுரை, டிச. 11-**

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தூணை, தொல்லியல்துறை சார்ந்த 7 பேர் கொண்ட குழு ஆய்வு செய்தது.

மதுரை திருப்பரங்குன்றம் மலையில் இருக்கும் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற உத்தரவிடக்கோரி மதுரையை சேர்ந்த ராம ரவிக்குமார், மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கு விசாரணையின்போது, சம்பந்தப்பட்ட பகுதியில் சிக்கந்தர் தர்கா உள்ளது. தீபத்தூணுக்கும், தர்காவுக்கும் குறைந்த இடைவெளி இருப்பதாகவும், அங்கு தீபம் ஏற்றும்பட்சத்தில் சட்டம், ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என அரசு தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து இந்த வழக்கை விசாரித்து வந்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், கடந்த மாதம் திருப்பரங்குன்றம் மலைக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார். பின்னர், கார்த்திகை தீப திருநாளன்று திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்று திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோவில் நிர்வாகத்துக்கு கடந்த 1-ந்தேதி உத்தரவிட்டார். அந்த உத்தரவை பின்பற்றி கடந்த 3-ந் தேதி தூணில் தீபம் ஏற்றப்படவில்லை. இதனால் நீதிபதியின் தீர்ப்பை நிறைவேற்றாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுதாரர் ராம ரவிக்குமார் தாக்கல் செய்த கோர்ட்டு அவமதிப்பு வழக்கை அவசர மனுவாக அதே நீதிபதி உடனடியாக விசாரித்தார். கடந்த 3-ந்தேதி மாலை 6.30 மணி அளவில் நீதிபதி பிறப்பித்த உத்தரவில், மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் ராம ரவிக்குமாரும் அவருடன் 10 பேரும் சென்று தீபம் ஏற்ற வேண்டும். இவர்களுக்கு மத்திய தொழில் பாதுகாப்பு படை (சி.ஐ.எஸ்.எப்) வீரர்கள் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என உத்தரவிட்டார்.

அதன்படி அவர்கள் அனைவரும் திருப்பரங்குன்றம் மலை அடிவாரத்துக்கு சென்றனர். அங்கு மதுரை மாநகர போலீஸ் கமிஷனர் லோகநாதன் தலைமையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த போலீசார், இந்த பகுதியில் 144 தடையை அமல்படுத்தி மதுரை மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டு இருப்பதால் மலை உச்சிக்கு சென்று தீபம் ஏற்ற அனுமதிக்க முடியாது என தெரிவித்தனர். இதனால் இருதரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதுகுறித்து நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனிடம் மறுநாள் (4-ந்தேதி) முறையிடப்பட்டது. அதன்பேரில் அந்த வழக்கினை விசாரித்த நீதிபதி, திருப்பரங்குன்றம் பகுதியில் அமலில் இருந்த 144 தடையை ரத்து செய்தார். ராம ரவிக்குமார் தரப்பினர் மீண்டும் மலை உச்சிக்கு சென்று தீபத்தூணில் இரவு 7 மணிக்குள் தீபம் ஏற்ற வேண்டும். இவர்களுக்கு மதுரை மாநகர போலீஸ் கமிஷனர் உரிய பாதுகாப்பை வழங்குவதுடன், தீபம் ஏற்றப்பட்டது குறித்து 5-ந்தேதி அவர் நேரில் ஆஜராகி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டார்.

இதையடுத்து ராம ரவிக்குமார் தரப்பினர் திருப்பரங்குன்றம் சென்றனர். அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவர்களை தடுத்து தீபம் ஏற்ற அனுமதி மறுத்தனர். இதனால் 2-வது நாளும் தீபத்தூணில் தீபம் ஏற்றப்படவில்லை. பின்னர் 5-ந்தேதி விசாரிக்கப்பட்ட இந்த வழக்கின்போது, அரசு தரப்பில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்து இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அதை ஏற்று இந்த கோர்ட்டு அவமதிப்பு வழக்கை 9-ந்தேதிக்கு ஒத்திவைப்பதாகவும், மலையில் தீபம் ஏற்ற சென்ற ராம ரவிக்குமார் தரப்பினருக்கு பாதுகாப்பு அளிக்கும்படி பிறப்பித்த உத்தரவை நிறைவேற்ற முடியாதது ஏன்? என்று மத்திய தொழில் பாதுகாப்பு படை (சி.ஐ.எஸ்.எப்.) கமாண்டன்ட்டிடம் அறிக்கை பெற்று மத்திய அரசு வக்கீல் தாக்கல் செய்ய வேண்டும் என நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டார்.

இந்த நிலையில், திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணை, தொல்லியல்துறை சார்ந்த 7 பேர் கொண்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். நேற்று காலை 8.45 மணிக்கு தொடங்கிய ஆய்வு 3 மணி நேரமாக நடந்தது. இந்த ஆய்வில் விசாரணைக்கு தேவையான தரவுகளும் சேகரிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த தூணில் தீபம் ஏற்றக் கோரிய வழக்கின் மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் நிலையில், ஆய்வு நடத்தப்பட்டுள்ளது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

## சுவிட்சர்லாந்தை வீழ்த்திய இந்தியா

5-வது உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டி சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யூ வணிக வளாகத்தில் நேற்று தொடங்கியது. இதில் பங்கேற்றுள்ள 12 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன. ‘பி’ பிரிவில் அங்கம் வகிக்கும் இந்தியா தனது தொடக்க ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தை எதிர்கொண்டது. இதில் முதல் ஆட்டத்தில் தேசிய சாம்பியனான தமிழகத்தின் வேலவன் செந்தில்குமார் 7-6, 7-6, 7-5 என்ற நேர் செட்டில் சுவிட்சர்லாந்தின் ராபின் கடோலாவை வீழ்த்தினார்.

ஜோஸ்னா சின்னப்பா 7-1, 5-7, 7-2, 7-2, 7-0 என்ற செட் கணக்கில் ஸ்டெல்லா காப்மேனை 18 நிமிடங்களில் மடக்கினார். அபய்சிங், அனாஹத் சிங் ஆகிய இந்தியர்களும் தங்களது ஆட்டங்களில் வெற்றி தேடித்தந்தனர். முடிவில் இந்தியா 4-0 என்ற கணக்கில் சுவிட்சர்லாந்தை தோற்கடித்தது.

## வெஸ்ட்இண்டீஸ் 205 ரன்கள்

நியூசிலாந்து- வெஸ்ட் இண்டீஸ் மோதும் 2-வது டெஸ்ட் வெல்லிங்டனில் இன்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற நியூசிலாந்து அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி வெஸ்ட் இண்டீஸ் அணியின் தொடக்க வீரர்களாக ஜான் கேம்பல், பிராண்டன் கிங் ஆகியோர் களமிறங்கினர். இரு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 66 ரன்கள் சேர்த்தது. கிங் 33 ரன்னில் ஆட்டமிழந்தார். அடுத்த வந்த ஹாட்ஜ் டக் அவுட் ஆகி வெளியேறினார். அரை சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட கேம்பல் 44 ரன்னில் வெளியேறினார்.

இதனையடுத்து கேப்டன் ரோஸ்டன் சேஸ் மற்றும் சாய் ஹோப் ஜோடி சேர்ந்து பொறுப்புடன் விளையாடி அணியை சரிவில் இருந்து மீட்டனர். இந்த ஜோடி 60 ரன்கள் சேர்த்தது. இதில் சாய் ஹோப் 48 ரன்னிலும் சேஸ் 29 ரன்னிலும் வெளியேறினர். அதனை தொடர்ந்து வந்த வீரர்கள் சொற்ப ரன்னில் ஆட்டமிழந்தனர். இதனால் வெஸ்ட் இண்டீஸ் 75 ஓவர்களில் 205 ரன்னில் ஆல் அவுட் ஆனது. நியூசிலாந்து தரப்பில் பிளேர் டிக்னர் 4 விக்கெட்டும், மிச்சேல் 3 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

## மெஸ்ஸி சுற்றுப்பயண விவரம்

அர்ஜென்டினா கால்பந்து அணியின் கேப்டன் லயோனல் மெஸ்ஸி 3 நாள் சுற்றுப்பயணமாக இந்தியாவுக்கு வருகிறார். 14 ஆண்டுக்கு பிறகு இந்தியாவுக்கு வருகை தரும் அவர் மும்பை, கொல்கத்தா, ஐதராபாத், டெல்லி ஆகிய இடங்களில் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். வருகிற 13-ம் தேதி அதிகாலை கொல்கத்தா வந்தடையும் மெஸ்ஸி, அங்கு நிறுவப்பட்டுள்ள அவரது 70 அடி உயர சிலையை திறந்து வைக்கிறார். ஆனால் பாதுகாப்பு கருதி அவர் ஓட்டலில் இருந்தபடி காணொலி வாயிலாக சிலையை திறந்து வைக்கிறார். உலகிலேயே மெஸ்ஸியின் உயரமான சிலையாக இது இருக்கும். பின்னர் கொல்கத்தா சால்ட்லேக் மைதானத்தில் நடக்கும் கால்பந்து நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். அவரை பார்ப்பதற்கு 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் திரளுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அங்கிருந்து ஐதராபாத் செல்லும் அவர் இரவில் தெலுங்கானா மாநில முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டியுடன் இணைந்து காட்சி போட்டியில் ஆடுகிறார்.

14-ந்தேதி மும்பைக்கு கிளம்பும் கால்பந்து சூப்பர் ஸ்டார் மெஸ்ஸி 45 நிமிடங்கள் நடைபெறும் பேஷன் ஷோவில் ஒய்யாரமாக வலம் வர உள்ளார். அவருடன் அர்ஜென்டினா நடுகள வீரர் ரோட்ரிகோ டி பால், அவரது நீண்ட கால கிளப் வீரர் உருகுவேயின் லூயிஸ் சுவாரஸ் ஆகியோரும் இணைகிறார்கள். இந்த நிகழ்ச்சியில் கிரிக்கெட் பிரபலங்கள், பாலிவுட் நட்சத்திரங்கள், தொழிலதிபர்கள் பங்கேற்கிறார்கள். முன்னதாக மாலை 5 மணிக்கு மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் அரங்கேறும் 7 பேர் ஆடும் கால்பந்து போட்டியில் களம் கண்டு ரசிகர்களை மகிழ்விக்க உள்ளார். இளம் கால்பந்து வீரர்களும் அவருடன் இணைந்து விளையாட இருக்கிறார்கள். அத்துடன் இசை நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இறுதியாக 15-ந்தேதி டெல்லி செல்லும் அவர் பிரதமர் மோடியுடன் கலந்துரையாடுகிறார்.

## மகளிர் உரிமைத்தொகை 2-ம் கட்ட விரிவாக்கம்:

# நாளை தொடங்கி வைக்கிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்



**சென்னை, டிச. 11-**

2-ம் கட்ட மகளிர் உரிமைத் தொகை விரிவாக்க திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை தொடங்கி வைக்கிறார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:- மகளிர் மேம்பாட்டிற்காக தமிழ்நாட்டில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்தார். கலைஞர் உரிமை தொகை திட்டத்தில் முதல் கட்டமாக சுமார் 1 கோடியே 13 லட்சத்து 75 ஆயிரத்து 492 பயனாளிகளுக்கு ஒவ்வொரு மாதமும் 15-ந்தேதி மகளிரின் வங்கிக்கணக்கில் ரூ.1,000 வரவு வைக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும் என அறிவித்திருந்தார். அதன்படி சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. இதில் விண்ணப்பித்தவர்களில் தகுதி வாய்ந்தவர்களுக்கு வரும் 12-ம் தேதி (நாளை) முதல் உரிமை தொகை வழங்கப்பட உள்ளது.

இதற்கான நிகழ்ச்சி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடக்க உள்ளது. மதியம் 3 மணிக்கு நடக்கும் இந்த நிகழ்ச்சிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்குகிறார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை வகிக்கிறார். இந்த நிகழ்ச்சியில் சமூக சேவகி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், 2022-ம் ஆண்டு சீனாவின் காங்சோவில் நடைபெற்ற மாற்றுதிறனாளர் ஆசிய விளையாட்டு பூப்பந்து போட்டியில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியவருமான துளசிமதி முருகேசன் ஆகியோர் உடன் கலந்து கொள்கின்றனர்.

கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், நன்னிலம் மகளிர் நிலவுடைமைத் திட்டம், விடியல் பயணம், மக்களை தேடி மருத்துவம், சுய உதவி குழுக்கள், விளையாட்டு, வெற்றி நிச்சயம், நலம் காக்கும் ஸ்டாலின், பெண் தொழில் முனைவோர், தோழி விடுதிகள் போன்ற திட்டங்களினால் பயன் பெற்ற மற்றும் சாதனை பெண்களின் வெற்றிக் கதைகளை வெளிக்கொணரும் நிகழ்வாக மாநில அளவில் ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# பிரதமர் மோடி, அமித்ஷாவுடன் ராகுல்காந்தி திடீர் சந்திப்பு

**புதுடெல்லி, டிச. 11-**

மத்திய அரசின் தலைமை தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர்களைத் தேர்வு செய்வது தொடர்பாக பிரதமர் மோடி மற்றும் மத்திய அமைச்சர் அமித் ஷாவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி சந்தித்துப் பேசினார்.

நாட்டில் தலைமை தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர்களைத் தேர்வு செய்யும் குழுவில் பிரதமர் மோடி, அமித் ஷா, எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ராகுல் காந்தி உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர். இந்நிலையில் புதிய தலைமை தகவல் ஆணையரைத் தேர்வு செய்யும்பொருட்டும் காலியாக உள்ள 8 தகவல் ஆணையர்களின் இடங்களை நிரப்பும் பொருட்டும் இந்த குழுவின் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

மேலும் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தின் தலைவரைத் தேர்வு செய்வது குறித்தும் இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற வளாகத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் அறையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி, அமித் ஷாவுடன் ராகுல் காந்தியும் கலந்துகொண்டனர். பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு சிலரது பெயர்களை பரிந்துரை செய்ததாகவும் அதற்கு ராகுல் காந்தி தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாகவும் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இந்த கூட்டம் நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது.

# 4 இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்களுக்கு பணிநியமன ஆணைகள் அமைச்சர் வழங்கினார்

**சென்னை, டிச. 11-**

4 இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்களுக்கு பணிநியமன ஆணைகளை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி-II போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்ற 4 இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்களுக்கு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் பணிநியமன ஆணைகளை வழங்கினார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

தமிழ்நாடு முதல்வர்மற்றும் துணை முதல்-அமைச்சரின் வழிகாட்டுதலின் படி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, இளைஞர்களுக்கு பயன்பெறும் வகையில் தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை செயல்படுத்தி வருகிறது.

2,764 தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு 3,16,916 மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் பயன் அடைந்துள்ளனர். தொழில்நெறி வழிகாட்டுதல் வழங்கப்படுவதுடன், தொழில்நெறி கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் மூலம் நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகளுக்கான 342 இலவச பயிற்சி வகுப்புகளில் 17,220 போட்டித் தேர்வர்கள் பங்குபெற்று 1,145 தேர்வர்கள் பல்வேறு அரசு மற்றும் பொது துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர். மேலும், பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் போட்டித் தேர்வுகளுக்கான 55 இலவச பயிற்சிகள் வழங்கப்பட்டு, 3,523 போட்டித் தேர்வர்கள் பயன் அடைந்துள்ளனர். மெய்நிகர் கற்றல் தளம் மற்றும் கல்வித் தொலைக்காட்சியின் மூலம் பயிற்சி உள்ளடக்கங்கள் வழங்கப்படுகின்றன.

மேலும், கடந்த 5 ஆண்டுகளில் மாவட்டங்கள் தோறும் சிறிய மற்றும் பெரிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 2,84,754 வேலைநாடுநர்கள் (4,919 மாற்றுத்திறனாளிகள் உட்பட) பல்வேறு தனியார் துறை நிறுவனங்களில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டம் மூலம் இந்நிதியாண்டில் ரூ.5.10 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு 14,297 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அ.தி.மு.க. ஒன்றிணைய வேண்டும்

## ஓ.பன்னீர்செல்வம் பேட்டி

**சென்னை, டிச. 11-**

வருகிற சட்டசபை தேர்தலை சந்திக்க அ.தி.மு.க. ஒன்றிணைய வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

சட்டசபை தேர்தலை சந்திக்க அ.தி.மு.க. தீவிரமாக தயாராகி வருகிறது. இதையொட்டி அ.தி.மு.க. செயற்குழு-பொதுக்குழு கூட்டம் சென்னையை அடுத்த வானகரத்தில் நடைபெற்று வருகிறது. இந்த செயற்குழு, பொதுக்குழு கூட்டத்தில், மாநில, மாவட்ட நிர்வாகிகள் என 4 ஆயிரம் பேர் பங்கேற்றுள்ளனர். இந்த பொதுக்குழு கூட்டத்தில் 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்த நிலையில், தேனியில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- அ.தி.மு.க. பொதுக்குழுவின் தீர்மானங்கள் முழுமையாக வந்தபிறகு அதுகுறித்து நான் பேசுகிறேன். தமிழ்நாடு நன்றாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் அனைவருமே பிரிந்து கிடக்கின்றன அ.தி.மு.க. சக்திகள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என விரும்புகின்றனர். நன்றி வணக்கம். இவ்வாறு அவர் கூறினார்.

# கோவை செம்மொழிப் பூங்காவை பொதுமக்கள் பார்வையிட அனுமதி

**கோவை, டிச. 11-**

இன்று முதல் செம்மொழிப் பூங்காவை பார்வையிட பொதுமக்கள் பார்வையிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கோவை காந்திபுரத்தில் உள்ளசிறைத்துறை மைதானத்தில் ரூ.208 கோடி செலவில் செம்மொழிப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. 45 ஏக்கர் பரப்பளவில் உலகத்தரத்தில் பல்வேறு நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த பூங்காவினை கடந்த மாதம் 25-ந்தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இந்த பூங்காவினை பார்வையிட வரும் பொதுமக்களுக்கு நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ஒரு நபருக்கு ரூ.15, குழந்தைகளுக்கு (10-வயதிற்குட்பட்டோர்) ரூ.5, நடைபாதை உபயோகிப்போருக்கு ஒரு நபருக்கு (மாதாந்திர கட்டணம்) ரூ.100, கேமராவிற்கு ரூ.25, வீடியோ கேமராவிற்கு ரூ.50, திரைப்பட ஒளிப்பதிவிற்கு (நாளொன்றிற்கு) ரூ.25 ஆயிரம், குறும்பட ஒளிப்பதிவிற்கு மற்றும் இதர ஒளிப்பதிவிற்கு (நாளொன்றிற்கு) ரூ.2 ஆயிரம் என கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. செம்மொழிப்பூங்காவினை இன்று (வியாழக்கிழமை) காலை 10 மணி முதல் பொதுமக்கள் பார்வையிடலாம். இந்தபூங்கா காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்படும். இந்த தகவலை மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# நத்தம் அருகே மக்கள் தொடர்பு முகாம்



**நத்தம், டிச.11-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குட்டுப்பட்டியில் தமிழக அரசின் மக்கள் தொடர்பு முகாம் நடந்தது.

இந்த முகாமிற்கு மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் திருமலை தலைமை தாங்கினார்.கூட்டுறவு சங்க துணை பதிவாளர் உஷாநந்தினி, தாசில்தார் ஆறுமுகம், திமுக மத்திய ஒன்றிய செயலாளர் சேக்சிக்கந்தர் பாட்சா, வட்டார வளர்ச்சி அலுவலர் ரவீந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மண்டல துணை தாசில்தார் சுந்தரபாண்டியன் வரவேற்றார். தொடர்ந்து முகாமில் பட்டா மாறுதல், புதிய ரேசன் அட்டை, சிறுகுறு விவசாய சான்று,உழவர் பாதுகாப்பு அட்டை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

இதில் வருவாய் ஆய்வாளர் துர்காதேவி,கிராம நிர்வாக அலுவலர் சிவக்குமார் உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.



**பழனிமலை லயன்ஸ் கிளப் சார்பில் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் பாரத சாரண, சாரணியர் இயக்க மாணவ மாணவிகளுக்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. இளைஞரணி இணைச்செயலாளர் பண்ணாடி ராஜா பரிசுகளை வழங்கினார்.**



**திண்டுக்கல் அரசு போக்குவரத்து கழக மண்டல அலுவலகத்தில் பொது மேலாளர் முத்துகிருஷ்ணன் தலைமையில் மனித உரிமை தின உறுதிமொழி எடுக்கப்பட்டது.**

# திருமலைக்கேணியில் சஷ்டி பூஜை விழா



**நத்தம், டிச.11-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கார்த்திகை மாத சஷ்டி பூஜை விழா நடந்தது. இதையொட்டி முருக பெருமானுக்கு பால்,பழம்,பன்னீர், விபூதி,சந்தனம், புஷ்பம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், சிறப்பு அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.மேலும் அருகிலுள்ள காமாட்சி மவுன குருசாமி மடத்திலும் சிறப்பு பூஜைகள் நடந்தது.இதில் சுற்று வட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். இதைபோலவே நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள தண்டபாணி சன்னதியிலும், குட்டூர் உண்ணாமுலை அம்பாள் கோவிலில் உள்ள முருகப்பெருமான் சன்னதியிலும் சஷ்டியையொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது.இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# சாயல்குடி அருகே 33 மூட்டை ரேசன் அரிசி கடத்திய 2 பேர் மீது வழக்கு பதிவு



**கடலாடி,டிச.11-**
தமிழகக் கடலோர பகுதிகளில் கடத்தல் சம்பவங்களை கட்டுப்படுத்த கடலோரப் பாதுகாப்புக் குழும கூடுதல் காவல் துறை இயக்குநரின் அறிவுறுத்தலின் பேரில் கடற்காவல் நிலையங்கள் தோறும் சிறப்புப்படை அமைக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வந்தது.

இது சம்பந்தமாக கடந்த 7 ஆம் தேதி சிறப்பு சார்பு ஆய்வாளர் கண்ணன் மற்றும் நுண்ணறிவு பிரிவு காவலர் மதியழகன் மற்றும் காவலர்கள் சகிதம் கடத்தல் தடுப்பு சம்பந்தமாக ஏர்வாடி கிழக்கு கடற்கரை சாலையில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது சந்தேகத்திற்கு இடமான முறையில் வந்து கொண்டிருந்த டாட்டா சுமோ வாகனத்தை நிறுத்த முற்பட்டபோது நிற்காமல் சென்றது. நிற்காமல் சென்ற வாகனத்தை துரத்திச் சென்று பிடித்த போது வாகனத்தை நிறுத்தி விட்டு அதிலிருந்து இரண்டு நபர்கள் தப்பி ஓடிவிட்டனர் பின்பு வாகனத்தை சோதனை செய்தபோது வாகனத்தில் 33 மூட்டைகளில் இருந்த அரிசியை கைப்பற்றியும் தப்பி ஓடிய நபர்கள் சம்பந்தமாக விசாரணை செய்த போது தப்பியுடைய நபர்கள் கொட்டகை புனவாசல் கிராமத்தைச் சேர்ந்த முனியசாமி மகன் பாலசுப்ரமணியம் மற்றும் அதே கிராமத்தைச் சேர்ந்த ராமர் மகன் மாரி நாதன் என தெரிய வந்தது மேலும் கைப்பற்றிய 33 மூட்டைகளில் இருந்த 1500 கிலோ எடையுள்ள அரிசியை மேல் நடவடிக்கைக்காக இராமநாதபுரம் குடிமைப் பொருள் வழங்கள் குற்றப் புலனாய்வுத்துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.

# பருவமாற்றம் காரணமாக பூச்சி தாக்க வாய்ப்பு: யூரியா அதிகம் பயன்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தல்



**ராமநாதபுரம்,டிச.11-**
பருவமாற்றம் காரணமாக வானம் மப்பும் மந்தாரமாக உள்ளதால் பூச்சி தாக்க வாய்பவ்பு உள்ளதால் தேவைக்கு அதிகமாக யூரியா உரங்களை பயன்படுத்த வேண்டாம் என ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் இணை இயக்குனர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பாண்டில் தற்போதுவரை 937 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. வடகிழக்கு பருவ மழையைப் பயன்படுத்தி நெல், சிறுதானியங்கள், பயறு வகைப் பயிர்கள், பருத்தி மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள் உள்ளிட்ட வேளாண்மை பயிர்களும், மிளகாய், தென்னை மற்றும் காய்கறிப் பயிர்கள் உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களும் 1 லட்சத்து 79ஆயிரத்து 700 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு விவசாயப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

தற்போது விவசாயிகள் நெற்பயிருக்கு மேலுரமிடுவதற்கு தேவையான யூரியா, காம்ப்ளக்ஸ் உரங்கள், அம்மோனியம் குளோரைடு, அம்மோனியம் சல்பேட் உரங்களை தங்கள் பகுதிக்கு அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் விவசாயிகள் வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். சம்பா பருவத்தில் இதுநாள் வரை யூரியா 17,722 மெ.டன், டி.ஏ.பி- 4,457 மெ.டன், பொட்டாஷ் 578 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் உரங்கள் 10,420 மெ.டன், டிரிப்பிள் சூப்பர் பாஸ்பேட் 966 மெட்ரிக் டன் ஆக மொத்தம் 34,423 மெ.டன் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாகவும் தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. கலெக்டர் உத்தரவின்படி வேளாண்மை இணை இயக்குநர் பாஸ்கரமணியன் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு) நாகராஜன் ஆகியோர் ராமநாதபுரம் வட்டாரத்திலுள்ள சில்லரை உர விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்வதை ஆய்வு செய்தனர்.

தற்போது சாகுபடி செய்யபபட்டு வரும் பயிர்களுக்குத் தேவையான யூரியா 2,574 மெட்ரிக் டன்,, டி.ஏ.பி. 702 மெட்ரிக் டன். பொட்டாஷ் 484 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் 2,667 மெட்ரிக் டன், ஆக மொத்தம் 6,427 மெட்ரிக் டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாகவும், தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது பூச்சி மற்றம் நோய் எளிதில் தாக்கும் வகையில் வானம் மப்பும் மந்தாரமாக உள்ளதால் விவசாயிகள் யூரியா உரங்களை தேவைக்கு அதிகமாக பயன்படுத்த வேண்டாம். தேவைப்படும் பட்சத்தில் ஏக்கருக்கு 22 கிலோ யூரியா மற்றும் மேலுரம் இடலாம். யூரியாவுடன் இணை பொருட்களான யூரியா அல்லாத உரங்கள், இயற்கை உரங்கள், உயிர் ஊக்கிகள், உள்ளிட்ட உரங்களை யூரியாவுடன் இணைத்து வாங்க விவசாயிகளை கட்டாயப்படுத்தக்கூடாது. மேலும், உர விற்பனையாளர்கள் உரங்களின் இருப்பு விவரம் மற்றும் விலைப்பட்டியலை விவசாயிகளுக்கு தெரியும் வண்ணம் வைக்க வேண்டும். விற்பனை செய்யும்போது விவசாயிகளிடம் ஆதார் அடையாள அட்டை பெற்று விற்பனை முனை இயந்திரம் மூலமாக மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு கண்டிப்பாக விற்பனை இரசீது வழங்கப்பட வேண்டும் தவறும் பட்சத்தில் உர விற்பனையாளர்கள் மீது உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985-ன்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பாஸ்கரமணியன் எச்சரித்துள்ளார்.

# அன்னை வசந்தா டிரஸ்ட் சார்பில் முதியோர்களுக்கு அருள்நிறை காலை உணவு வழங்கிடும் திட்டம்

## நகராட்சி சேர்மன் ரம்யா முத்துக்குமார் தொடங்கி வைத்தார்



**திருமங்கலம், டிச.11-**
மதுரை மாவட்டம்,திருமங்கலம் நகரில் தொடர்ந்து 1150 நாட்களாக ஆதரவற்ற முதியோர்களுக்கு மதிய நேர நல்உணவினை இலவசமாக வழங்கி வரும் அன்னை வசந்தா டிரஸ்ட் சார்பில் தற்போது முதியோர்களுக்கு நாள்தோறும் அருள்நிறை காலை உணவு இலவசமாக வழங்கிடும் புதிய திட்டத்தினை நகராட்சி சேர்மன் ரம்யா முத்துக்குமார் தொடங்கி வைத்தார்.

திருமங்கலம் நகரில் செயல்பட்டு வரும் அன்னை வசந்தா டிரஸ்ட் சார்பில் காந்திசிலை தெற்குத் தெரு பகுதிகளில் வசித்திடும் ஏழை எளிய மக்கள் மற்றும் வயதான முதியோர்களுக்கு மதிய வேளை நல்உணவினை வள்ளலார் வழியில் இலவசமாக வழங்கி பசிப்பிணி போக்கிடும் நிகழ்வு கடந்த 1150 நாட்களாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த திட்டத்திற்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் நல் உள்ளங்களின் உதவிகள் ஒருபக்கம் இருப்பினும் அன்னை வசந்தா டிரஸ்ட் நிர்வாகிகள் இயற்கை உணவு மற்றும் தின்பண்டங்களை தயாரித்து விற்பனை செய்தும் தாங்கள் நடத்தி வரும் நிறுவனங்களில் கிடைத்திடும் பங்களிப்பு தொகையினை வைத்தும் சொந்தமாக உணவு தயாரித்து முதியோர்களின் பசிப்பிணி போக்கிடும் இந்த திட்டத்தினை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் மதியநேர இலவச நல்உணவு வழங்கிடும் திட்டத்தின் 1150வது நாளான நேற்று அன்னை வசந்தா டிரஸ்ட் சார்பில் முதியோர்களுக்கு நாள்தோறும் காலை நேரத்தில் அருட்பிரகாச வள்ளலாரின் ஜீவகாருண்ய அருள்நிறை காலை உணவு இலவசமாக வழங்கிடும் புதிய திட்டம் சிறப்புடன் துவங்கப்பட்டு உள்ளது. அதன்படி பசும்பொன் தெருவிலுள்ள டிரஸ்ட் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற முதியோர்களுக்கு அருள்நிறை காலை உணவு இலவசமாக வழங்கிடும் திட்டத்தின் துவக்க விழாவிற்கு டிரஸ்ட் தலைவர் அமுதவள்ளி பழனிமுருகன் தலைமை வகித்தார்.டிரஸ்ட் நிறுவனர் எஸ்.எம்.ரகுபதி வரவேற்றார்.

டிரஸ்ட் கௌரவ தலைவர் ச.ராஜேந்திரன்,டிரஸ்ட் பொருளாளர் அருள்ஜோதி ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் திருமங்கலம் நகராட்சி சேர்மன் ரம்யா முத்துக்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஆதரவற்ற முதியோர்களுக்கு அன்னை வசந்தரா டிரஸ்ட் சார்பில் அருள்நிறை காலை உணவு இலவசமாக வழங்கிடும் திட்டத்தினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் 24வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் மச்சவள்ளி செல்வம் திருமங்கலம் இலக்கிய பேரவை செயலாளர் சு.சங்கரன், தொல்காப்பியர் மன்ற தலைவர் இருளப்பன்,கம்பன் கழக பொருளாளர் பிரசன்னா டி.முருகன்,அறிவு அன்பு அறக்கட்டளை நிறுவனர் குரு.ஜெயச்சந்திரன்,திருமங்கலம் மக்கள் நலச் சங்கத் தலைவர் இரா.சக்கையா, டிரஸ்ட் துணை தலைவர் ஆறுமுகம், வி.ஏ.ஓ (ப.நி) ராஜேந்தின் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.விழாவின் நிறைவில் டிரஸ்ட் செயலாளர் சித்ரா ரகுபதி நன்றி தெரிவித்தார். திருமங்கலம் அன்னை வசந்தா டிரஸ்ட் சார்பில் 1150 நாட்களாக மதிய நல்லுணவு வழங்கப்பட்டு வரும் நிலையில் தற்போது துவங்கப்பட்டுள்ள அருள்நிறை காலை உணவு இலவசமாக வழங்கிடும் திட்டம் ஆதரவற்ற முதியோர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியினை ஏற்படுத்தி உள்ளது.

# விருதுநகர்: ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின் சார்பாக மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கான மருத்துவ மதிப்பீட்டு முகாம்



**திருவில்லிபுத்தூர் டிச.11-**
விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்கம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல மாவட்ட அலுவலகம் இணைந்து மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மருத்துவ மதிப்பீட்டு முகாமை முதன்மை கல்வி அலுவலர் முனைவர் அரவிந்தன் உதவி திட்ட அலுவலர் திருக்குமரன் வழிகாட்டுதலின்படி பிறந்த குழந்தை முதல் 18 வயது உடைய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மருத்துவ மதிப்பீட்டு முகாம் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து நடைபெற்றது.

இந்த முகாமில் மனநல மருத்துவர் இளவரசி , காது மூக்கு தொண்டை மருத்துவர் ரமேஷ் பாபு எலும்பு முறிவு மருத்துவர் செல்வகுமார் உள்ளிட்ட மருத்துவக் குழுவினர் மாற்றுத்திறனாளிகளுக்கு சோ தனை செய்து அடையாள அட்டை வழங்குவதற்கான பரிந்துரையை வழங்கினர் முகாமில் தனித்துவ அடையாள அட்டை வழங்கப்பட்டது.

பேருந்து , ரயிலில் பயணம் செய்து தக்க வகையில் இலவச பயண அட்டைகளும் வழங்கப்பட்டன .

மேலும் இம்முகாமானது ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்க்கிழமை தொடர்ந்து நடைபெறும் அனைவரும் இந்த முகாமை பயன்படுத்திக் கொள்ளலாம் முகாமில் உள்ளடங்கிய கல்வி திட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குமார் -திருவில்லிபுத்தூர் வட்டார வளமைய மேற்பார்வையாளர் பொறுப்பு மருதக்காளை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முகாமிற்கான ஏற்பாடுகளை வட்டார ஒருங்கிணைப்பாளர் சுகந்திராசி ஆசிரிய பயிற்றுநர்கள் சிறப்பு பயிற்றுநர்கள், மற்றும் இயன்முறை மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் இணைந்து செய்திருந்தனர்

# தமிழ்நாடு மகளிர் கிரிக்கெட் போட்டியில் விளையாட ஒட்டன்சத்திரம் மாணவி தேர்வு

**ஒட்டன்சத்திரம்,டிச.11-**
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பட்ஸ் சி. பி. சி.இ பள்ளி எட்டாம் வகுப்பு மாணவி அஷ்ரங்கா தமிழ்நாடு பெண்கள் அணி கிரிக்கெட் போட்டியில் விளையாட தேர்வாகியுள்ளார் அவருக்கு பள்ளி நிர்வாகத்தினர் பெற்றோர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.




# அலங்காநல்லூர் தர்மசாஸ்தா ஆலயத்தில் முகூர்த்தக்கால் நடும் விழா

## திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்



**அலங்காநல்லூர், டிச.11 -**
மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஸ்ரீ தர்மசாஸ்தா ஆலயத்தில் மார்கழி மாத திருவிழா நடைபெற உள்ளது. இதையொட்டி முன்னதாக நேற்று அய்யப்பன் கோவில் முன்பாக முகூர்த்தக் கால் நடும்விழா பட்டர்களின் வேத மந்திரம் முழங்க நடந்தது. இதில் கோவில் நிர்வாகி சீனிவாசன், மற்றும் முருக, அய்யப்ப பக்தர்கள் கலந்து கொண்டனர். மேலும்

வருகிற 16 ந்தேதி அதிகாலை மங்கள இசையுடன் பூஜைகள் தொடங்குகிறது. 17ந் தேதி, மாலையில் உலக நன்மை வேண்டி 1008 திருவிளக்கு பூஜைகள் நடைபெறும். 18ந்தேதி . பகலில் அன்னதானமும், இரவு அய்யப்ப சுவாமி புறப்பாடும் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் செய்துள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



● தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று மயிலாப்பூர் மேற்கு பகுதி, ஆழ்வார்பேட்டை, 122-வது வட்டம், பாகம் 24-ல் 'என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி' கூட்டத்தில் கலந்து கொண்டு, வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். இக்கூட்டத்தில், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி, அவைத் தலைவர் ராஜேந்திரன், பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



● சென்னை வானகரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



● தமிழ்நாடு அரசின் சார்பில், மூதறிஞர் இராஜாஜியின் 147-வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை பாரிமுனை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் வைத்திநாதன், ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

உணவு தானியங்களை சேமித்து வைக்க 7 மாவட்டங்களில்

# ரூ.332.46 கோடியில் 10 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்

**சென்னை, டிச. 11-**

ரூ.13.97 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 3 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்களை திறந்து வைத்து, உணவு தானியங்களை சேமித்து வைக்க திண்டுக்கல் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் ரூ.332.46 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மேற்கூரை அமைப்புடன் கூடிய 10 நவீன நெல் சேமிப்பு வளாகங்களுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

"தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (10.12.2025) தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாகதமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நாமக்கல் மாவட்டம் – சேந்தமங்கலம், நீலகிரி மாவட்டம் – பந்தலூர், திருவண்ணாமலை மாவட்டம் – கீழ்பெண்ணாத்தூர் ஆகிய வட்டங்களில் 7,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 13.97 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்களை திறந்து வைத்தார்.

மேலும், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் 332 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மேற்கூரை அமைப்புடன் கூடிய 10 நவீன நெல் சேமிப்பு வளாகங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

அனைவருக்கும் உணவு பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், பொது விநியோகத் திட்டத்திற்கான உணவு தானியங்களை சேமித்து வைத்திடும் நோக்குடன் கிடங்குகளின் கொள்ளளவினை உயர்த்தும் வகையிலும், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து உணவு தானியங்களை நவீன முறையில் சேமித்து வைத்திடவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பினை வட்ட அளவில் உறுதி செய்யவும், பொதுவிநியோகத் திட்டத்தின் பயன்பாட்டிற்கான தானியங்களின் சேமிப்பிற்கான கொள்ளளவினை அதிகப்படுத்தும் விதமாகவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் சார்பில் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டத்தில் 4.97 கோடி ரூபாய் செலவில் 2000 மெ.டன் கொள்ளளவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்குகள், நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டத்தில் 4.50 கோடி ரூபாய் செலவில் 2500 மெ.டன் கொள்ளளவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்குகள், திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் வட்டத்தில் 4.50 கோடி ரூபாய் செலவில் 2500 மெ.டன் கொள்ளளவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்குகள், என மொத்தம் 13.97 கோடி ரூபாய் செலவில் 7000 மெ.டன் கொள்ளளவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள 3 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்களை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் சார்பில் டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நடுவூர் கிராமத்தில் 170.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,00,000 மெ.டன் கொள்ளளவிலும், நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டம், திருக்கண்ணபுரம் கிராமத்தில் 29.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20,500 மெ.டன் கொள்ளளவிலும், திருக்குவளை வட்டம், மணக்குடி கிராமத்தில் 22.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 17,000 மெ.டன் கொள்ளளவிலும், மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், பரசலூர் கிராமத்தில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9,000 மெ.டன் கொள்ளளவிலும், தரங்கம்பாடி வட்டம், வில்லியநல்லூர் கிராமத்தில் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 21,000 மெ.டன் கொள்ளளவிலும் நெல் சேமிப்பு வளாகங்கள் கட்டும் பணிகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், டி.புடையூர் கிராமத்தில் 12.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9,500 மெ.டன் கொள்ளளவிலும் மற்றும் திட்டக்குடி வட்டம், தாழநல்லூர் கிராமத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11,000 மெ.டன் கொள்ளளவிலும்; திருவண்ணாமலை மாவட்டம், மேல்பெண்ணாத்தூர் வட்டம், செங்கம் கிராமத்தில் 17.91 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12,000 மெ.டன் கொள்ளளவிலும், திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கோவிலம்மாபட்டி கிராமத்தில் 12.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9,000 மெ.டன் கொள்ளளவிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், ஜூஜூப்பள்ளி கிராமத்தில் 12.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9,000 மெ.டன் கொள்ளளவிலும் என மொத்தம் 2,18,000 மெ.டன் கொள்ளளவில், 332 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மேற்கூரை அமைப்புடன் கூடிய 10 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் கட்டும் பணிகளுக்கு தமிழ்நாடு முதல்வர் அடிக்கல் நாட்டினார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எஸ்.ஐ.ஆர். பணிகளில்... (1-ம் பக்க தொடர்ச்சி)

நாட்களுக்கு மாநிலம் தழுவிய தீவிரமான பரப்புரையாக மேற்கொள்ளப்பட இருக்கிறது. மேலும், தமிழ்நாடு முழுவதும் டிசம்பர் 10 முதல் ஜனவரி 10 வரை, பகுதி/ஒன்றியம்/நகரம்/பேரூர் கழக செயலாளர்கள் 68,463-க்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளுக்குச் சென்று 2026 சட்டமன்ற தேர்தலில் அந்தந்த வாக்குச்சாவடி அளவில் வெற்றி பெறுவதற்கான உத்திகளை வகுக்க பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.

**நேரடியாக பார்வையிட**

இதுவரை எந்தவொரு கட்சியும் செய்யாத வகையில் 1900 மேற்பட்ட பகுதி/ஒன்றியம்/நகரம்/பேரூர் கழக செயலாளர்களுடன் - 78 கழக மாவட்ட செயலாளர்கள், 33 பாராளுமன்ற உறுப்பினர்கள், 124 சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநில, மாவட்ட குழு உறுப்பினர்கள் குழுவானது 30 நாட்களில் 68,463 வாக்குச்சாவடிகளையும் நேரடியாக பார்வையிடும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், 6.8 லட்சம் தி.மு.க. பூத் கமிட்டி உறுப்பினர்களை உற்சாகப்படுத்தவும், அணிதிரட்டவும் பரப்புரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

**வீடு வீடாகச் சென்று....**

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒவ்வொரு பூத்திலும் தெரு முனை கூட்டங்கள், வீடு வீடாகச் சென்று கலந்துரையாடல்கள் மற்றும் வாக்காளர் சரிபார்ப்பு இயக்கங்கள் மூலம் அடித்தட்டு அளவில் கழகத்தினரை ஈடுபடுத்தி வாக்குச்சாவடி பலப்படுத்தப்பட வேண்டும் என்றும், முன்னோடி தலைவர்கள் உட்பட அனைத்து தி.மு.க. நிர்வாகிகளும் 2021 சட்டமன்ற தேர்தலை விட கூடுதல் வாக்குகளை தங்கள் வாக்குச்சாவடியில் பெறும் வகையில் தங்களது வாக்குச்சாவடிகளை பலப்படுத்தி வெற்றி வாக்குச்சாவடியாக மாற்றிக்காட்ட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், வாக்குச்சவாடி குழு உறுப்பினர்கள் அனைவரும் போர்க்கால அடிப்படையில் எஸ்.ஐ.ஆர். பணிகளில் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

**440 வாக்குகளை....**

இந்த வாக்குச்சாவடிக்கு 440 வாக்குகளை இலக்காக நிர்ணயித்து, ஒவ்வொரு வாக்குச்சாவடி உறுப்பினருக்கும் அவரவருக்கான இலக்கை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நிர்ணயித்து கொடுத்தார். இக்கூட்டத்தில் நிர்வாகிகள், பூத் கமிட்டியினர், சார்பு அணியினர் கலந்து கொண்டு இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள 440 வாக்குகளைப் பெறுவதற்கான வியூகத்தை விவாதித்து அதனை படிவத்தில் குறித்து தி.மு.க. தலைமையில் சமர்ப்பித்தனர். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒவ்வொரு குடும்பத்துக்கு... (1-ம் பக்க தொடர்ச்சி)

போட்டுத்தான் ஆட்சிக்கு வந்தார்கள். வாக்காளர் பட்டியலில் இருந்து இறந்தவர்கள் பெயர்களை நீக்குவதில் என்ன தவறு. அ.தி.மு.க. என்றைக்கும் யாருக்கும் அடிமை இல்லை. 1999-ல் இதே தி.மு.க., பாஜகவுடன் கூட்டணி அமைத்து மத்திய அமைச்சரவையில் இடம்பிடித்தது. இன்றைக்கு நாம் கூட்டணி வைத்தால் மதவாத கட்சி கூட்டணி என்கிறார்கள். எல்லா கட்சியும் கூட்டணி வைப்பது இயல்பு. கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப கூட்டணி மாறுபடும்.

அ.தி.மு.க. ஒரு ஜனநாயக இயக்கம். கட்சிக்காக உழைத்தால் யாரும் பதவிக்கு வர முடியும். உழைப்பவர்களுக்கு இடம் உண்டு. அவர்கள் எம்.எல்.ஏ.வாக வருவார்கள். இங்கே வந்த பல நிர்வாகிகள் வேட்பாளராக வர வாய்ப்பு உள்ளது. எனக்கு பின்னாலும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும் அ.தி.மு.க. மக்களுக்காக இயங்கும் என்று ஜெயலலிதா கூறினார். அதை நிரூபிக்கும் வகையில் அனைவரும் சுறுசுறுப்பாக பணியாற்ற வேண்டும். தேர்தலில் வெற்றிபெற வேண்டும். தி.மு.க. அரசு எவ்வளவோ கொள்ளையடித்து வைத்துள்ளது. இந்த தைப்பொங்கலுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கு ரூ.5 ஆயிரம் வழங்குங்கள்.

2026-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் நல்ல கூட்டணி அமையும். அ.தி.மு.க. சொந்த பலம் உள்ள கட்சி. தி.மு.க. பலம் இழந்த கட்சி. அதனால் தான் கூட்டணியை நம்பி நிற்கிறார்கள். நாம் சுதந்திரமான கட்சி. தேர்தல் நேரத்தில் கூட்டணி அமைப்போம். தேர்தலுக்கு முன்பு அருமையான கூட்டணி அமையும். பெரும்பாலான இடங்களில் வெற்றி பெறும். அ.தி.மு.க. தான் கூட்டணிக்கு தலைமை தாங்கும். தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

தமிழகம் முழுவதும் பூர்த்தி செய்யப்பட்ட

# எஸ்.ஐ.ஆர். படிவங்களை மீண்டும் ஒப்படைக்க இன்றே கடைசி நாள்

**சென்னை, டிச. 11-**

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தில், பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை ஒப்படைக்க இன்றே கடைசி நாளாகும்.

தலைமை தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்படி, தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் கடந்த நவம்பர் மாதம் 4-ம் தேதி தொடங்கியது. இப்பணிகள் டிச.4-ம் தேதி முடிவடைய இருந்த நிலையில், 11-ம் தேதி (இன்று) வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டது.

தமிழகத்தில் நேற்று முன்தினம் நிலவரப்படி 6 கோடியே 40 லட்சத்து 84,624 பேருக்கு படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அதேபோல், கணக்கீட்டு படிவங்களை பதிவேற்றும் பணி 99.55 சதவீதம் முடிவடைந்துள்ளது. அதாவது 6 கோடியே 38 லட்சத்து 25,877 வாக்காளர்களின் படிவங்கள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், கணக்கீட்டு படிவம் பூர்த்தி செய்து பெறுதல், பதிவு செய்தல் ஆகிய பணிகள் நாளையுடன் நிறைவு பெறுகிறது. தொடர்ந்து, வரைவு வாக்காளர் பட்டியல் டிச.16-ம் தேதி வெளியிடப்படும். அன்று முதல், வரும் ஜன 15-ம் தேதி வரை ஆட்சேபங்கள் இருந்தால் தெரிவிக்கலாம். மேலும், வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் அல்லது ஏற்கெனவே உள்ள பதிவுகள் குறித்து மறுப்பு தெரிவிக்கலாம். அவற்றின் மீது பரிசீலனைகள் நடைபெறும். இறுதி வாக்காளர் பட்டியல் பிப்.14-ம் தேதி வெளியிடப் படுகிறது.



● சென்னை தலைமைச்செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் வழியாக தேர்வான இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் துறைசார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொளி காட்சி வாயிலாக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் சார்பில் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நடுவூர் கிராமத்தில் ரூ.170.22 கோடி மதிப்பீட்டில் ஒரு லட்சம் மெ.டன் கொள்ளளவுடன் மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளத்திற்கான அடிக்கல் நாட்டியதை தொடர்ந்து உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம், முன்னாள் மத்திய நிதித்துறை இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர் இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம்பூபதி, மற்றும் பலர் கலந்துகொண்டார்கள்.